வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 25.09.2021 சனிக்கிழமை | இதழ் : 294 | பக்கங்கள் : 17

# நாடு திறக்கப்படும்போது சுகாதார வழிகாட்டல்கள்

## கோவிட் ஒழிப்புக்கான செயலணி கூட்டத்தில் நேற்று முக்கிய முடிவு

கொழும்பு, செப்ரெம்பர் 25

நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீக்கி நாட்டை மீண்டும் திறக்கும்போது பிறப்பிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் கட்டுப்பாடுகளை, முழுமையான திட்டமிடலுடன் தயாரிக்க, கோவிட் ஒழிப்புக்கான விசேட செயலணி தீர்மானித்தது. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில், நேற்று கோவிட் ஒழிப்புக்கான செயலணியின் கூட்டம், மெய்நிகர் தொழில் நுட்பத்தினூடாக இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானங்கள் எட்டப்பட்டன. 15



# செப்.11 தாக்குதல் 20 வருட பூர்த்தி; நினைவேந்தல் நிகழ்வில் ஜனாதிபதி

வொஷிங்டன், செப். 25

அமெரிக்காவின் வாஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் 20 வருடப் பூர்த்தியையொட்டி, அமெரிக்காவின் மேன்ஹெடனில் நிர்மாணிக் கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு 15

# பால் மா, கோதுமை மா, சீமெந்து விலைகளை அதிகரிக்க அனுமதி!

## வாழ்க்கை செலவுகள் குழு அங்கீகாரம்

கொழும்பு, செப். 25

பால் மா, கோதுமை மா, சீமெந்து, சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க வாழ்க்கை செலவுகள் குழு நேற்று அனுமதி வழங்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த தீர்மானத்தை அமைச்சரவை அனுமதிக்காக முன்வைக்க உத்தேசித்துள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன. 02

# சகல தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலையாவார்கள்!

## அமைச்சர் நாமல் கிழக்கில் உறுதி

மட்டக்களப்பு, செப். 25

தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றார். இளைஞர்களை கைதுசெய்து தடுத்து வைக்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை என்று விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் 02

# தியாகி திலீபன் நினைவேந்தலுக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு!

மன்னார், செப். 25

தியாகி திலீபனின் நினைவேந்தலை மக்களை கூட்டி நடத்த ஏற்பாடு நடப்பதாகவும், அதற்கு தடை விதிக்க வேண்டும் என்ற பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்று, தடை பிறப்பிக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் மறுத்து விட்டது.

எதிர்வரும் 26ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பின் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு ஒன்று இடம்பெறவிருக்கிறது. மக்களை அழைத்து தமிழ் தேசிய வாழ்வு 15

# கொரோனாவால் 82 பேர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 25

நாட்டில் மேலும் 82 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் 15

# விகிதாசார தேர்தல் முறையை மாற்றும் முயற்சி நடக்கின்றது

## சிறுபான்மை கட்சிகளுக்கு ஆபத்து என்கிறார் மனோ

கொழும்பு, செப். 25

“நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஆகியவை ஏற்படுத்தும் சந்தடிகளின் மத்தியில் தந்திரமாக தேர்தல் முறையை விகிதாசாரத்தில் இருந்து கலப்பு முறைக்கு ஒட்டுமொத்தமாக மாற்றி, குறிப்பாக தமிழ் பேசும் மக்களினதும், சிறு கட்சிகளின 15

# தமிழ் எம்.பி.க்களை ஒன்றிணைக்க முயற்சி

திருகோணமலை, செப், 25

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் புதிய முயற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் வண. கலாநிதி கி. நோயெல் இமானுவல், தென்க 15

## ‘தாய்நிலம்’ ஆவண பட நிகழ்வு;

# சம்பந்தன் - விக்னேஸ்வரன் இன்று கூட்டாக ஆரம்பித்து வைக்கின்றனர்





யாழ்ப்பாணம், செப், 25

தமிழ் மக்களின் தாயகமான வடக்கு-கிழக்கில் காலம் காலமாக அரசாங்கங்கள் மேற்கொண்டுவரும் நில அபகரிப்பை ஆதார பூர்வமாக எடுத்துக்காட்டும் ‘தாய்நிலம்: நில அபகரிப்பு - இலங்கை வாழ் தமிழ் மக்களின் உண்மையான பெருந்தொற்று” என்ற ஆவணப் படம் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திரையிடப்பட 15



# இப்படியும் நடக்கிறது...!

விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக மௌனிக்கப்பட்டது முள்ளிவாய்க்காலில்தான். ஆனால், அவர்களின் தோல்வி எங்கே ஆரம்பமானது என்றால், அது விடுதலைப் புலிகள் இயக்கத்தை உலக நாடுகள் பயங்கரவாத இயக்கமாகப் பட்டியலிடத் தொடங்கியபோதே ஆரம்பமாகிவிட்டது.

அதனால்தான் இதனை நன்கு தெரிந்து வைத்திருந்த சிங்களப் பெரும்பான்மை மக்கள் ஒவ்வொரு நாடுகளும் புலிகளை தடை செய்தபோது அதனை தமது வெற்றியாக பட்டாசு கொளுத்திக் கொண்டாடினார்கள்.

புலிகள் மீதான தடை சாத்தியமாவதற்கு அப்போது சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமரையே நம்மவர்கள் குற்றம் சாட்டிய அதேவேளை, தென்னிலங்கையில் அந்த விடயத்தால் கதிர்காமர் 'ஹீரோ' ஆனார்.

கதிர்காமர் மிகச்சிறந்த இராஜதந்திரி என்பதையும் அவர் இந்த வியடத்தில் முக்கிய பங்காற்றினார் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனாலும் அவர் அரசியல் ரீதியாக ஒவ்வொரு நாடுகளையும் அணுகியபோதிலும், அந்தந்த நாடுகளிலுள்ள அதிகார வர்க்கம், கதிர்காமரின் சொற்களை மாத்திரம் கேட்டு அதனைச் செய்திருக்க முடியாது.

நமது தமிழர்கள் பெருமளவில் புலம்பெயரத் தொடங்கியது, எண்பதுகளின் ஆரம்பத்தில், அப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் தனித்து இயங்க விரும்பியதும், மற்றைய இயக்கங்களை ஆயுத ரீதியாக ஒழிக்க முயன்றதும் இரகசியமானதல்ல. அதனால் மற்றைய இயக்க போராளிகள் பெரும்பாலானவர்கள் புலி எதிர்ப்பாளர்களாகவே இருந்தார்கள். புலம்பெயர்ந்தவர்களில் இவர்களும் கணிசமானவர்கள் இருந்தார்கள்.

இவ்வாறு புலம்பெயர்ந்த முன்னாள் போராளிகள், அதாவது புலி எதிர்ப்பாளர்கள் தாம் புலம்பெயர்ந்த நாடுகளில் அந்தந்த நாடுகளின் மொழிகளைப் படித்து, பல்கலைக்கழகங்களிலும் படித்துக் கொண்டிக்க, புலி ஆதரவாளர்களோ எப்படியாவது ஒரு வேலை எடுத்து அந்த வருமானத்தில் புலிகளின் ஆயுத தேவைக்கு பணங்களை வாரி வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

புலம்பெயர்ந்த புலி எதிர்ப்பு போராளிகள் பல்கலைக்கழகங்களில் படித்து அந்தந்த நாடுகளின் ஆளும் வர்க்கங்களுடன் பழகத் தொடங்கியிருந்தனர்.

இவர்களின் பிரசாரங்களே புலிகள் தடை செய்யப்படுவதற்கு முக்கிய காரணங்களாகின. ஆனால், கண்ணுக்குத் தெரியாமல் அவர்கள் செய்த அந்த பிரசாரத்தின் பலன் கதிர்காமருக்குப் போய்ச் சேர்ந்தது. இவை எல்லாம் பழைய சங்கதிகள்.

ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகியிருக்கின்றது. புலி ஆதரவு இளையோர் புலம்பெயர் நாடுகளில் ஆளும் வர்க்கத்துடன் மிக நெருக்கமாகி விட்டனர். அதிகம் ஏன், நமது இளைஞர்கள் பலர் ஆளும்வர்க்கத்தில் தாங்களும் பங்குகொள்ளவும் தொடங்கிவிட்டனர்.

இந்த இளையோரைப் பொறுத்தவரை புலிகளும் அதன் மௌனிக்கப்பட்ட தலைமையும் கதாநாயகர்கள். சிறீலங்கா அரசு என்பது அவர்களைப் பொறுத்தவரை மிக அந்நியமான ஒன்று.

சிறீலங்கா எதிர்கொள்ளும் மிகப்பெரிய அச்சுறுத்தல் இதுதான் என்பது இன்றைய ஆட்சியாளர்களுக்கு தெரியாததல்ல. அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில்தான் அவர்களின் கவனம் இருக்கும் என்பதும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டியது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ, புலம்பெயர் தமிழர்களை நோக்கி அழைப்பு விடுத்திருப்பது இப்போது நமது ஊடகங்கள், அரசியல் தலைவர்கள் மத்தியில் பேசுபொருளாகியிருக்கின்றது.

புலம்பெயர் தமிழர் அமைப்புகள் சிலவற்றை தடைசெய்து வைத்துக்கொண்டு புலம்பெயர் தமிழர்களுடன் சேர்ந்து இயங்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி தெரிவிப்பதாக தமிழ்த் தரப்பிலிருந்து கண்டனக் கணைகள் வெளிவருகின்றன.

நியாயமான கண்டனம்தான். ஆனால், அவர்களும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கத் தயாராக இருப்பதாக தமது சமிக்ஞையை வெளிப்படுத்தினால் சிலவேளைகளில் அந்தத் தடையை தளர்த்துவதற்கு ஜனாதிபதி பரிசீலிக்கலாம்.

ஆனால், நமக்கு ஏற்படுகின்ற சந்தேகம் அதுவல்ல, அவ்வாறு தடையை நீக்கினாலும் புலம்பெயர் தமிழர் சார்பில் பேசுவதற்கு எல்லா அமைப்புக்களும் ஒன்றாக முன்வருமா? உலகத் தமிழர் பேரவையோ அல்லது பிரிட்டன் தமிழர் பேரவையோ முன்வந்தால், அது புலம்பெயர் தமிழர்களை ஒட்டுமொத்தமாக பிரதிபலிக்குமா? நல்லாட்சி அரசின் காலத்தில் பிரிட்டன் தமிழர் பேரவையின் தலைவருக்கும் மங்கள சமரவீரவுக்கும் இடையிலான தேனிலவு நாம் அறியாததல்ல. அதனால் பலன் அடைந்தவர்கள் யார் என்பதும் கேள்விக்குரியதல்ல.

இந்த பின்னணிகளை எல்லாம் நம்மைவிட அதிகம் அறிந்து வைத்திருக்கிறது இன்றைய அரசு. பந்தை நமது பக்கம் போட்டால், அவர்கள் அதனை தங்களுக்குத் தாங்களே அடித்து விளையாடிக்கொண்டிருப்பார்கள் என்பதும் அரசு அறியாததல்ல.

**- ஊர்க்குருவி**

# எரிபொருள் கொள்வனவுக்கு கடன் பெற இரண்டு நாடுகளுடன் இலங்கை பேச்சு

கொழும்பு, செப். 25

எரிபொருள் கொள்வனவுக்கு கடன் பெற்றுக்கொள்வது தொடர்பிலும், எரிபொருளைக் கடனாகப் பெற்றுக்கொள்ளது தொடர்பிலும் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துடன் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

இதன்படி இந்திய அரசிடமிருந்த 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை அரசு பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார் என்று 'எகனமி நெக்ஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

நிலுவையில் உள்ள எரிபொருள் கொள்வனவுக்கான தொகையைச் செலுத்துவதற்கும் புதிதாக எரிபொருள் கொள்வனவு செய்வதற்குமே இந்தக் கடன் தொகை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இரண்டு முக்கிய உள்நாட்டு வங்கிகளில் கிட்டத்தட்ட 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெற்றுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களில் கூறப்பட்டுள்ளதைப் போன்று ஈரானிடமிருந்து கடன் கோரப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், "கட்டுப்பாடுகளின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளுடன் நாங்கள் கடன்கள் தொடர்பான விடயங்களைக் கையாள்வோம்" என்றார். (இ)

## சகல தமிழ்...

ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையடய மண்ட் விளையாட்டு கழகத்துக்கு மைதானத்தை கையளிக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தேவையற்ற விதத்தில் இளைஞர் களை கைதுசெய்து தடுத்துவைக்க வேண்டிய அவசியம் எமது அரசாங்கத்துக்கு இல்லை. தெரியாமல் செய்த குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் எனக்கூறி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கத்தால் அதிகமான விடங்களைச் செய்ய முடிய வில்லை. அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல விடயங்களைப் பின்பற்ற வேண்டும்.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். இதனடிப்படையில் இதுவரை 16 பேர் விடுதலை செய்யப் பட்டுள்ளனர். எஞ்சியுள்ள கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

"பேஸ்புக்கில், புகைப்படங்களை பதிவிட்ட குற்றங்களுக்காக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து நீதித்துறையுடன் பேசி, அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படும். குறித்த கைதிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றும் அவர் இதன்போது கூறினார்.

## பால் மா,...

எனினும், அமைச்சரவையின் அனுமதி கிடைக்கபெற்றால் மாத்திரமே இந்த நடைமுறை செயல்படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அரிசி மற்றும் குழந்தைகளுக்கான பால்மா ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்காதிருக்க வாழ்க்கை செலவுகள் குழு தீர்மானித்துள்ளது. (ஐ)

**கல்வி TV CHANNEL-1**

**25.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

**கல்வி TV CHANNEL - 2**

**25.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
25.09.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,**
**news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியா நம்புகிறதா?

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்க்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் இடையில், இரு தரப்பு உறவுகளை பலப்படுத்துவது தொடர்பில் பேச்சு இடம்பெற்றதாகவும், இதன்போது நிலுவையிலுள்ள உடன்பாடுகளை விரைவாக நிறைவுசெற்வதற்கு இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்திருக்கின்றது. ஐ. நா. பொதுச் சபையின் கூட்டத் தொடரில் பங்குகொள்வதற்காக சென்றிருக்கும் வேளையிலேயே மேற்படி சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது.

இலங்கை - இந்திய உறவில் பாரதூரமான விரிசல்கள் ஏற்படவில்லை என்பது உண்மையாயினும்கூட, இலங்கை - இந்திய உறவில் மகிழ்ச்சியான முன்னேற்றம் இல்லை என்பதும் உண்மை. குறிப்பாக சீனா - இலங்கை நெருக்கத்தின் காரணமாக, இந்தியாவின் நலன்கள் மலினப்படுத்தப்பட்டுள்ளன என்றோர் அபிப்பிராயம் இந்திய வெளிவிவகார நிபுணர்கள் மத்தியில் நிலவுகின்றது. குறிப்பாக ஏற்கனவே செய்துகொண்ட முத்தரப்பு உடன்பாடான கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை, மக்களின் எதிர்ப்பு என்னும் பெயரில் கொழும்பு கைவிட்டமை தொடர்பில், இந்தியா கடும் அதிருப்திக்கு உள்ளாகியமை உண்மை. இதேவேளை, ஏற்கனவே பரஸ்பர கலந்துரையாடல்களில் இணக்கம் காணப்பட்டிருந்த பல திட்டங்கள் தொடர்ந்தும் கிடப்பில் தான் இருக்கின்றன. இது தொடர்பிலும் இந்தியாவிற்கு மகிழ்ச்சியில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சரிவடைந்திருக்கும் இரு தரப்பு உறவுகளை சரிசெய்யும் இலக்குடன், மிலிந்த மொறகொட இந்தியாவின் தூதுவர் பதவியை பொறுப்பேற்றிருக்கின்றார். இந்திய - இலங்கை இரு தரப்பு உறவுகளை சரிசெய்யும் இலக்குடன், ஒரு மூலோபாய ஆவணத்துடனேயே மொறகொட புதுடில்லி சென்றிருக்கின்றார். இந்திய - இலங்கை உறவில் ஒரு நம்பிக்கை பற்றாக்குறை இருப்பதாக குறிப்பிட்டிருக்கும் மொறகொட, அதனை வரப்போகும் மூன்று வருடங்களில் எவ்வாறு சரிசெய்வதென்னும் ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றார். இவ்வாறானதொரு பினபுலத்தில்தான் அதுவரை கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், மீண்டும் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்தியாவிற்கு எரிச்சலூட்டும் சில விடயங்கள் இடம்பெற்றிருந்தாலும்கூட, கொழும்பு, இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு எதிராக எதனையும் செய்யவில்லை என்னும் கருத்தும் புதுடில்லி வட்டாரத்திடம் உண்டு. மூலோபாய பாதிப்பு என்பது அடிப்படையில் இராணுவ ரீதியானது. சீனாவின் பிரசன்னம் அதிகரித்திருக்கின்றது என்பது உண்மையாயினும்கூட, அது இராணுவ ரீதியான பதற்றங்களை ஏற்படுத்தக்கூடிய நிலையில் இல்லை என்னும் பார்வையின் அடிப்படையிலேயே புதுடில்லி விடயங்களை அவதானிப்பதாகத் தெரிகின்றது. கொழும்பும் அவ்வாறான விஷப்பரீட்சை ஒன்றிற்குள் இறங்கப் போவதில்லை. ஏனெனில், அவ்வாறான விஷப்பரீட்சைகளில் ஈடுபட்டால் அதன் பின்னர் புதுடில்லி அமைதியாக இருக்காது என்பதும் கொழும்புக்குத் தெரியும். இதில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஏற்கனவே போதுமான படிப்பினை உண்டு.

ஆனால், சீனாவுடனான அதீத பொருளாதார ஒத்துழைப்புகளை புதுடில்லி விருப்பாவிட்டாலும்கூட, அதனை ஓர் எல்லைக்கு மேல் கட்டுப்படுத்த முடியாது என்னும் யதார்த்தத்தை புதுடில்லியால் புறக்கணிக்க முடியாமல் இருக்கின்றது. சீனா போன்று, இந்தியாவால் பொருளாதார உதவிகளை இலங்கைக்கு வழங்க முடியாது. எனவே, சீனாவுடனான பொருளாதார ரீதியான ஒத்துழைப்புக்கள் இப்போது போல் தொடரத்தான் போகின்றது. ஆனால், அந்த பொருளாதார ரீதியான தலையீடுகள் இராணுவ ரீதியான தலையீடுகளாக மாறுமாக இருந்தால் நிலைமைகள் மோசமடையும்.

அவ்வாறு நிலைமைகள் மோசமடைவதற்கு விட்டுவிடக்கூடாது என்பதிலும், கொழும்பு கவனமாக இருப்பதாகவே தெரிகின்றது. மேலும், புவியியல் அமைவிடம் சார்ந்து சீனாவால் இராணுவ ரீதியாக இலங்கையை பயன்படுத்துவது கடினமான இலக்காகவே இருக்கும். இதனையும் இந்திய இராணுவ நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால், அதற்காக சீனாவின் பிரசன்னத்தை இந்தியா அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. இதனை கருத்தில் கொண்டே, முடிந்தவரையில் இந்தியாவையும் 'கூல்' பண்ணும் உத்திகளில் கொழும்பு ஈடுபட முயற்சிக்கின்றது. இந்த அடிப்படையில்தான் நிலுவையிலிருக்கும் உடன்பாடுகளை விரைவாக நிறைவு செய்யப் போவதாகக் கூறுகின்றது. ஆனால், உடன்பாடுகள் நிலுவையில் இருப்பதற்கு கொழும்பின் அணுகுமுறைகளே முழுமையான காரணம். ஆனால், இவ்வாறான வாக்குறுதி வழங்கும் இராஜதந்திரம் தொடர்பில் புதுடில்லி உடனடியாக மகிழ்ச்சியடையப் போவதில்லை. கிழக்கு கொள்கலன் முனைய அனுபவம் இந்தியாவிற்கு தெளிவான படிப்பினையை கொடுத்திருக்கின்றது.

# ரஜனி - திலீபன்

- அலசுவது இராஜதந்திரி -





*இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பமான எண்பதுகளின் ஆரம்பத் தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் அன்று தோற்றம் பெற ஆரம்பித்த அந்தகாரச்சூழலை மைய மாக வைத்து 'மரணத்துள் வாழ்வோம்' என்ற தலைப்பில் ஒரு கவிதை நூலை பிரசுரித்திருந் தனர்.*

*அந்நூலை வெளிக்கொண்டு வருவதில் முன்னிலையில் நின்றோரில் பிரபல கவிஞரும் அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவருமாக இருந்த சேரன் உருத்திரமூர்த்தியும் ஒருவர். சேரன் தற்போது கனடிய பல்கலைக் கழகமொன்றில் பேராசிரியராக பணியாற்றி வருகின்றார்.*

*தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மேலாண்மையை நிலைநாட்ட ஏனைய ஆயுதப் போராட்ட இயக்கங்களை வேட்டையாட ஆரம்பித்திருந்தனர். இந்த மூர்க்கத்தனமான நடவடிக்கை ஆயுதப்போராட்டம் தடம்புரள ஆரம்பிக்கின்றதென்பதை தெளிவுற அறியத்தந்திருந்தது.*

*சக இயக்கங்களில் இருந்த போராளிகளை மட்டுமல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளை விமர்சித்த புத்தி ஜீவிகளையும், அரசியல் வாதிகளையும் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் படுகொலை செய்திருந்தனர்.*

*சுமார் முப்பத்து நான்கு வருடங்களுக்கு முன்னர் நிலவிய வடக்கு - கிழக்கு நிலவரத்தை எடுத்து நோக்குகையில் அன்று செப்ரெம்பர் மாதத்தில் இரு வேறு வருடங்களில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த மரணங்களே நினைவுக்கு வருகின்றன.*

*நேற்றுமுன்தினம் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்துறையைச் சேர்ந்த திலீபனின் 34ஆவது ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. அப்போது திலீபனின் நினைவு தூபி அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செ.கஜேந்திரன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார்.*

*திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். அவரின் இயக்கப் பெயரே திலீபன் என்பதாகும். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான திலீபன் பாடசாலை நாட்களில் சதுரங்க விளையாட்டில் சிறந்து விளங்கினார்.*

*எண்பதுகளில் எராளமான மாணவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்தே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்திருந்தனர். இவர்களில் திலீபனும் ஒருவர். அரசியல் சிந்தனை மற்றும் பேச்சாற்றல் என்பவற்றை கொண்டிருந்த திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறையில் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார்.*

*1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுலாக்க வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிலை கொண்ட போது இந்தியப் படையினரின் இராணுவ அணுகுமுறைகளுக்கு எதிராகவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தும் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தினமே செப்ரெம்பர் 26ஆம் திகதியாகும்.*


*திலீபன் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த இடம் நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியாகும். அவரின் நினைவுத்தூபி நல்லூர் கல்யாண மண்டபத்துக்கருகே அமைக்கப்பட்டுள்ளது. அந்த நினைவுத்தூபிக்கு அருகிலேயே நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் பொலிஸாரினால் கைதாகி விடுதலையாகியிருந்தார்.*

*இதேசமயம் செப்ரெம்பர் மாதத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டிய ஒரு புத்திஜீவியே யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியையாக இருந்த ரஜனி திரணகம. தமது மருத்துவக் கல்லூரி நாட்களிலிருந்தே ரஜனி திரணகம ஓர் அரசியல் விமர்சகராகவும் மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு குரல் கொடுப்பவராகவும் இருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் புறம்போக்கான நடவடிக்கைகளைக்கூட அவர் விமர்சித்திருந்தார். இதன்வெளிப்பாடாக 'முறிந்த பனை'* (Broken Palmyrah) *என்ற நூலை வேறு சில பல்கலைக்கழக கல்வியாளர்களுடன் சேர்ந்து வெளியிட்டிருந்தார். வடக்கு - கிழக்கு பிரச்னையை நடுநிலை நின்று விரிவாக அணுகிய ஒரு நூலாகவே முறிந்த பனை நூல் காணப்படுகின்றது.*

*ஆனால், இந்த நூல் வெளியானதும் அதற்காக ரஜனி திரணகம கொடுத்த விலை அதிகமானதாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் அவரை யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் பல்கலைக்கழக சுற்றாடலில் வைத்தே சுட்டுக் கொன்றிருந்தனர். இச்சம்பவம் 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்றிருந்தது.*

*மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற வடக்கு - கிழக்கு யுத்தம், வடக்கு - கிழக்கு மக்களை 'இலவு காத்த கிளி' களாக்கிவிட்ட நிலையில். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பரில் உயிர் நீத்த திலீபனும், 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட ரஜனி திரணகமவும் மண்கவ்விய வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டத்தின் இருவேறு பரிமாணங்களாகவே நோக்கப்பட வேண்டியவர்களாகின்றனர்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

குடும்பத்தில், அலுவலகத்தில் நிலைமை திருப்தியாக இருக்கும். அக்கம்பக்கத்தினருக்கு சிறிய அளவில் உதவி செய்வீர்கள். பணப்புழக்கம் சுமாராக இருக்கும். மனதில் திருப்தி கூடும்.

**இடபம்**

குடும்பத்தில், அலுவலகத்தில் நிலைமை திருப்தியாக இருக்கும். அக்கம்பக்கத்தினருக்கு சிறிய அளவில் உதவி செய்வீர்கள். பணப்புழக்கம் சுமாராக இருக்கும். மனதில் திருப்தி கூடும்.

**மிதுனம்**

உடன் பணிபுரிவோர் இடையே ஒற்றுமை பலப்படும். குடும்பத்தில் ஒருவருக்கு திடீர் திருமணம் நிச்சயமாகும். காத்திருந்த விஷயத்துக்கு சில காலம் பொறுமை காக்க வேண்டும்.

**கடகம்**

கடன் குறையும். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர். பணியிடத்தில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். தொழில் செய்பவர்கள் கடுமையாக உழைத்து வெல்வீர்கள்.

**சிம்மம்**

சிக்கனம் காரணமாக நன்மை அடைவீர்கள். மனபலம் கூடும். சிரமம் தீர்வதற்கான வழி பிறப்பதால் மனத்தெளிவு உண்டாகும். சிலருக்கு ஆன்மிகப் பெரியோரின் சந்திப்பால் நிறைவு ஏற்படும்.

**கன்னி**

செலவு அதிகரிக்கும். மனதில் கவலை ஏதும் இருக்காது. கவனத்துடன் பேச வேண்டும். யாரையும் சிரமப்படுத்த வேண்டாம். அலுவலகத்தில் உங்களது கோரிக்கைகள் நிறைவேறும்.

**துலாம்**

சிலர் புது வீடு கட்ட திட்டமிடுவீர்கள். பக்தி அதிகரிக்கும். அரசாங்க அதிகாரிகள் மூலம் உதவி கிடைக்கும். பெரிய திட்டங்களை நிறைவேற்றி வெற்றி காண்பீர்கள்.

**விருட்சிகம்**

குடும்பத்தில் அன்பு அதிகரிக்கும். பணிக்கவலைகள் குறையும். உங்களின் செல்வாக்கு கூடும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். பலவிஷயங்களை கவனிக்க வேண்டி வரும்.

**தனுசு**

முன்பு இருந்த தொல்லைகள் நீங்கும். நல்ல பலன்கள் கிடைக்கும். பணியாளர்கள் நினைத்த நன்மைகளை அடைவார்கள். உயர் அதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

**மகரம்**

வீண் பழி ஏற்படும்படியான செயல்களை தவிருங்கள். பணத்தை கவனமாகக் கையாளுங்கள். நேர்மை தவற வேண்டாம். மாணவர்கள் உழைப்புக்கேற்ற நல்ல பலன் அடைவர்.

**கும்பம்**

பல நாட்களாக இருந்து வந்த மனக்குறை ஒன்று நீங்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். சுபச் செய்தி ஒன்று வரும். சிரமம் குறையும். புதிய வீட்டுக்கு மாற வாய்ப்புள்ளது.

**மீனம்**

உங்களின் சிரமம் தீர்க்க நண்பர் ஒருவர் உதவுவார். பரபரப்பான நாள். காலையில் நல்ல செய்தி ஒன்று வரும். கலகலப்பு அதிகரிக்கும். உழைப்பு அதிகரிக்கும். மன நிறைவு. செல்வாக்கு கூடும்.

# தி.மு.கவின் தில்லுமுல்லுகளை முறியடித்து உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெறுவோம்

## எடப்பாடி பழனிசாமி



திருப்பத்தூர், செப். 25

“உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. செய்யும் தில்லுமுல்லுகளை முறியடித்து வெற்றிபெற வேண்டும். அவ்வாறு வெற்றி பெறுவோம்” என்று முன்னாள் முதலமைச்சரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்துகிறார். முதற்கட்டமாக திருப்பத்தூரில் தேர்தல் ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசியதாவது:-

”உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. செய்யும் தில்லுமுல்லுகளை முறியடித்து அ.தி.மு.கவினர் வெற்றி பெற வேண்டும். தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தல் எப்படி நடந்தது? என்பது மக்களுக்கு தெரியும். ‘நீட்’ தேர்வு விவகாரத்தில் தி.மு.க. பச்சைப்பொய்யை மக்களிடம் தெரிவித்துள்ளது. தேர்தல் நேரத்தில் ஒரு பேச்சு, தேர்தல் முடிந்த பிறகு ஒரு பேச்சு என மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தின்போது தேசிய வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் நகை கடன் தள்ளுபடி செய்யப்படும் என வாக்குறுதி அளித்தார்.

ஆனால் தற்போது கூட்டுறவு வங்கிகளில் உள்ள நகை கடன்கள் மட்டுமே தள்ளுபடி செய்யப்படவுள்ளது. அதற்கும் ஏராளமான கட்டுப்பாடுகள் போட்டுள்ளார்கள்” எனவும் அவர் தெரிவித்தார்.

# லீனா மணிமேகலையின் கடவுச்சீட்டு முடக்கம்



சென்னை, செப். 25

தன்னுடைய கடவுச்சீட்டு முடக்கப்பட்டதை எதிர்த்து கவிஞர் லீனா மணிமேகலை சென்னை உயர் நிதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

திரைப்பட இயக்குநர் சுசிகணேசன் மீது கவிஞர் லீனா மணிமேகலை பாலியல் புகார் சுமத்தினார். இதையடுத்து லீனா மணிமேகலைக்கு எதிராக, சுசி கணேசன் சென்னை சைதாப்பேட்டை குற்றவியல் நீதிமன்றில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கு நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டி, லீனா மணிமேகலையின் கடவுச்சீட்டை முடக்கம் செய்ய சைதாப்பேட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் அவரின் கடவுச்சீட்டை அதிகாரிகள் முடக்கி உத்தரவிட்டுள்ளனர்.

இந்த உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் லீனா மணிமேகலை வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, “ஆராய்ச்சி பணிக்காக கனடாவில் உள்ள பல்கலைக்கழகத்துக்கு மனுதாரர் செல்ல உள்ளதால், கடவுச்சீட்டை முடக்கம் செய்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும்” என்று வாதிட்டார்.

இதையடுத்து வழக்கிற்கு 2 வாரங்களுக்குள் பதில் அளிக்கும்படி கடவுச்சீட்டு மண்டல அதிகாரிக்கு உத்தரவு அனுப்பிய நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

# தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பேணுவதில் முதல்வர் தனிக்கவனம் செலுத்த வேண்டும்

## வலியுறுத்துகின்றார் பன்னீர்ச்செல்வம்



சென்னை, செப். 25

தமிழகத்தில் சட்டம் -ஒழுங்கைப் பாதுகாப்பதில் முதல்வர் ஸ்டாலின் தனி கவனம் செலுத்த வேண்டும் என்று அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: மாநிலத்தின் வளர்ச்சிக்கு அமைதியான சூழல் முக்கியமானது. சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளால் பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படும் மாநிலங்களில், பொருளாதார வளர்ச்சி இருக்காது.

தமிழகத்தைப் பொறுத்தவரை சட்டம்- ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகள் ஒருபுறம் எடுக்கப்பட்டு வந்தாலும், கடந்த 10 நாள்களாக ஆங்காங்கே கொலைக் குற்றங்கள் நிகழ்ந்து வருவது வேதனை அளிக்கிறது.

வாணியம்பாடியில் மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலர் வசீம் அக்ரம் கொலை, திமுக முன்னாள் எம்.பி.யின் பேரன் கொலை, சேலம் ஆத்தூரைச் சேர்ந்த கணவன்-மனைவி எரித்துக் கொலை என்று தினமும் கொலைக் குற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

எனவே, மாநிலத்தில் அமைதியான சூழலை உருவாக்கும் வகையில், சட்டம்-ஒழுங்கு பிரச்னையில் முதல்வர் தனி கவனம் செலுத்த வேண்டும். அமைதியை சீர்குலைக்க முயல்வோரை இரும்புக்கரம் கொண்டு அடக்கவும், கொலைக் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு உரிய தண்டனை பெற்றுத்தரவும் அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுரை வழங்க வேண்டும்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு நேசக்கரம் நீட்ட தயாராகும் ஐரோப்பிய ஒன்றியம்

*விவசாய அமைச்சில் கலந்துரையாடல்*

கொழும்பு, செப். 25

**இலங்கையில் சேதனப் பசளையை பயன்படுத்தி முன்னெடுக்கும் விவசாயத்திற்கு தேவையான அனைத்துவித உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஜெனி கொரியா நியுனஸ் தெரிவித்துள்ளார்.**

விவசாய அமைச்சில் நடந்த கலந்துரையாடலின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இயற்கை விவசாயத்தை நோக்கி செல்வதாகவும், இலங்கை அதை நோக்கி செல்வது ஒரு நல்ல விடயமாகக் கருதுவதாகவும், இந்த செயல் முறையை வெற்றிகரமாக செய்ய உதவத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்வின்போது பேசிய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, நாடு முழுவதுமுள்ள விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு தயாராகும் இச்சந்தர்ப்பத்தில் சேதனப் பசளை பயன்படுத்துவது குறித்து அச்சத்தை ஏற்படுத்த சில அமைப்புகள் முயற்சிப்பதாக சுட்டிக்காட்டினார்.

இயற்கை விவசாயம் அரசாங்கத்தின் கொள்கையாக மாறியுள்ளதென்றும், சில குழுக்கள் உரிய கேள்விமனுக் கொள்கைக்கு மாற்றமாக பசளை மாதிரிகளை இறக்குமதி செய்திருந்தன. இது தொடர்பில் தாவர ஆய்வு மையம் வெளியிட்ட ஆய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்களை தவறாக வழிநடத்தி விவசாயிகளை தவறாக வழிநடத்த முயற்சிப்பதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு ஒன்லைனில் தொழிற்பயிற்சி

கொழும்பு, செப். 25

பாடசாலை மாணவர்களுக்கு ஒன்லைன் முறை மூலம் தொழில் பயிற்சி அளிக்கும் திட்டத்தை திறன் அபிவிருத்தி அமைச்சு தொடங்கியுள்ளது.

ஒன்லைன் கல்வியில் பல படிகளை முடித்தவுடன் மாணவர்கள் என்.வி.கியூ நிலை சான்றிதழைப் பெற முடியும்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, பாடத்திட்டம் தொலைக்காட்சிகள், யூரியூப் அல்லது பேஸ்புக் மூலம் ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை நடத்தப்படும்.

இறுதியில் அவர்கள் எழுத்துத் தேர்வை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள் பயிற்சிக்காக ஒரு தொழிற் கல்வி நிறுவனத்துடன் இணைக்கப்படுவார்கள் என்று அமைச்சர் அரம்பேபொல கூறினார். (அ)

# கட்டுத்துப்பாக்கி வெடித்து இரண்டு பேர் உயிரிழப்பு!

**ஒருவர் படுகாயம்**

கொழும்பு, செப். 25

முரியாகல்ல பகுதியில் மிருக வேட்டைக்காக பயன்படுத்தப்படும் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் இருவர் உயிரிழந்தனர் எனவும் ஒருவர் காயமடைந்தார் என்றும் கூறப்படுகின்றது.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் 60 மற்றும் 44 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்தனர்.

மேலும், சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, மூவர் குறித்த பகுதியில் சென்றுகொண்டிருந்த வேளையில், இருவர் மீது துப்பாக்கி பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஊரமக்களுக்கு அதனை தெரியப்படுத்துவதற்காக சென்ற மூன்றாவது நபர் மீது வேறு ஒரு கட்டுத்துப்பாக்கி வெடித்து அவரும் காயங்களுக்கு உள்ளானார் என கூறப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் 10 பேர் விரைவில் ஐ.தே.கவுக்கு தாவுவர்?

கொழும்பு, செப். 25

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் 10 பேர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நெருக்கமான சிலரின் செயற்பாடுகளால் கடும் அதிருப்தியில் இருக்கும் மேற்படி 10 பேரும், விரைவில் தாய் வீடு திரும்புவதற்கான பேச்சுகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், அதிருப்தியில் இருக்கும் உறுப்பினர்களை திருப்திப்படுத்தி, கட்சியில் தக்கவைத்துக்கொள்வதற்கான முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (அ)

# விடுதலை புலிகளின் புகைப்படம் வைத்திருந்த 2 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 25

விடுதலைப் புலிகளின் புகைப்படங்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 2 இளைஞர்கள் மானிப்பாயில் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வீதிச்சோதனையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் நடத்திய சோனையில் இரண்டு இளைஞர்களின் கைத்தொலைபேசியில் விடுதலைப் புலிகள் தொடர்புடைய புகைப்படங்கள் இருந்தன எனக் கூறி, மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

# ஒக்ரோபர் 15இற்கு பின் அமைச்சரவை மாற்றம்!

கொழும்பு, செப். 25

சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு பிறகு மாற்றம் இடம்பெறலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடி இறுதி முடிவை எடுக்கவுள்ளார்.

அமைச்சர்கள் சிலரின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்திகள் உருவாகியுள்ள நிலையிலேயே இந்த மாற்றம் இடம்பெறவுள்ளது.

# ஊரடங்கு உத்தரவை மீறிய 418 பேர் நேற்று கைது

கொழும்பு, செப். 25

கடந்த 24 மணித்தியாலங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 418 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 48 வாகனங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இது வரை 77,543 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# ரணில் விக்கிரமசிங்கமீது வடிவேல் சுரேஷ் பாய்ச்சல்!

கொழும்பு, செப். 25

மலையக மக்களின் சொத்தாகிய இராஜகிரியவில் உள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க தலைமையகத்தை ஸ்ரீகொத்தவுக்கோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவுக்கோ தாரை வார்க்க ஒரு போதும் இடமளிக்கப்போவதில்லை என அந்த சங்கத்தின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

வஞ்சகமாக அதனை அபகரிக்க முற்பட்டால் அதற்கு எதிராக முழு மலையகத்தையும் ஒன்று திரட்டி போராட்டம் நடத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

யாப்புக்கு இணங்க நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது மேற்படி தலைமையகம் மலையக மக்களுக்கு சொந்தமானது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அதனை மக்களிடமிருந்து பலாத்காரமாக அபகரிக்க முற்பட்டால் மலையகத்தை ஒன்றுதிரட்டி கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தவும் தயங்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் மிக அநாகரிகமாக செயற்பட்டதை குறிப்பிட்ட வடிவேல் சுரேஷ் எம்.பி, கடந்த காலத்தில் அவர் செய்த சூழ்ச்சியே மலையக மக்களின் பாரிய பின்னடைவுக்கு காரணம் என்றும் 1000 ரூபாய் சம்பள பிரச்சினை இழுத்தடிப்புக்கும் இன்று மலையகத்தில் தமிழ் அமைச்சர் ஒருவர் இல்லாத நிலைக்கும் ரணில் விக்கிரமசிங்கவே அடிப்படைக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தாம் தமது சிறப்புரிமையை பாதுகாக்கும் வகையில் சபாநாயகரிடம் வேண்டுகோள் முன்வைத்தார் என்றும் அதன்போது ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்ட வகையில் தமக்கு எதிராக குரல் எழுப்பினார் எனவும் அவர் தெரிவித்தார்.

இராஜகிரியில் உள்ள தலைமையகமானது ரணில் விக்கிரமசிங்கவின் சொத்தோ அல்லது ஸ்ரீகொத்தவின் சொத்தோ அல்ல. எவ்வாறெனினும் அந்த தலைமையகம் கை மாற வேண்டுமானால் அது வருடாந்த மாநாடு நடத்தப்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில தினங்களுக்கு முன் கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள், எம்.பிக்கள் என சிலர் மேற்படி தலைமையகத்துக்கு வந்து கட்டடத்தை சேதப்படுத்தி ஊழியர்களையும் தாக்கியுள்ளனர். அத்துடன் எனக்கும் மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

அந்தக் குழுவில் முன்னாள் அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, நவீன் திசாநாயக்க, இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த ருவன் விஜேவர்தன, ஆர்.யோகராஜன், சமன் ரத்ன பிரிய போன்றவர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

அவர்களுடன் அவர்களின் மெய்ப்பாதுகாவலர்களும் வந்திருந்தனர். அவர்கள் மிக மோசமாக நடந்துகொண்டதைக் குறிப்பிடவேண்டும்.

அதனையடுத்து எனது சிறப்புரிமையை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் நான் பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் சிறப்புரிமை பிரச்சினை ஒன்றை எழுப்பினேன். அதன்போதே என்னை பைத்தியக்காரன் என்று கூறி எனக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க குரல் கொடுத்தார்.

தேசியப்பட்டியலில் வந்தவரைவிட மக்கள் வாக்குகளினால் பாராளுமன்றம் வந்துள்ள எனக்கு எனது சிறப்புரிமை பற்றி பேச அதிகம் உரிமை உள்ளது. அதனை புரிந்து கொள்ளாத ரணில் விக்கிரமசிங்கவே பைத்தியக்காரன்.

எவ்வாறெனினும் இராஜகிரியில் உள்ள மேற்படி தலைமையகம் நீதிமன்ற தீர்ப்பின்படி மலையக தொழிலாளர்களுக்கும் அதன் நம்பிக்கை சபைக்குமே சொந்தமானது.

அதனை அபகரிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் சூழ்நிலை காரணமாக எதிர்காலத்தில் அது தொடர்பில் முழு மலையகத்தையும் ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் நாட்டை முழுமையாக திறக்கலாம்

## ராகமை மருத்துவ பீட பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு, செப். 25
எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளின் கீழ் நாட்டை முழுமையாக திறக்க முடியுமென ராகமை மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டை நீண்ட நாட்களுக்கு முடக்கியமைக்கான பெறுபேறுகள் தற்போது கிடைத்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் நாட்டை திறந்தாலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் 25 வீதமான ஊழியர்களை பணிக்கு அழைக்குமாறும், பொது போக்குவரத்துகளில் 50 சதவீத பயணிகளை உள்வாங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

திருமண நிகழ்வுகள், களியாட்டங்கள் உள்ளிட்டவற்றை நடத்துவதற்கு தொடர்ந்து தடை விதிக்க வேண்டுமென தெரிவித்த அவர், நாட்டு மக்களில் 70 தொடக்கம் 80 வீதமானவர் களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னரே நாடு திறக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முடக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கோவிட் மரணங்கள் மற்றும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்திருந்ததை அவதானிக்க முடிந்ததெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உள்நாட்டு பொறிமுறையை நாங்கள் நம்ப தயாரில்லை!

## எம் கே சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 25
ஒரு போதும் நாம் உள் நாட்டு பொறிமுறையை ஏற்கத் தயாரில்லை என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொதுச் செயலருமான எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.



நேற்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசுடன் பேசுவதால் இருந்தால் சர்வதேச மத்தி யஸ்துடன் தான் பேச வேண் டும். ஒருபோதும் இலங்கை அரசை நம்பத் தயாரில்லை.

இலங்கை அரசுடன் பேச செல்வ தென்பது தற்கொலைக்கு சமம். நடந்த இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்-என்றார்.

# உயர்தரம் கற்பதற்கு 236,053 பேர் தகுதி!

கொழும்பு, செப். 25
வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 236,053 பேர் உயர்தரத்துக்கு தெரிவாகியுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

2020 இல் நடைபெற்ற கல் விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன் தினம் வெளியாகின.

சாதாரண தரப் பரீட்சையின், அழகியல் பாடநெறிக்கான செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெறாததால், அந்த விடயதானம் இன்றியே பெறுபேறு வெளியிடப்பட்டது. இதன்படி மேற்படி செயன் முறைப் பரீட்சை பெறுபேறுகள் இன்றி 236,053 பேர் உயர் தரத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாடசாலைகள் ஆரம்பமானதும், செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, அதன் பெறுபேறுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவை பயன்படுத்தி அரசியல் நடத்துகின்றது அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, செப். 25**
**“கொரோனா விவகாரத்தை பயன்படுத்தி தற்போதைய அரசாங்கம் அரசியல் நடத்திவருகின்றது.” என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை திறப்பதற்கு முன்னர் ஆசிரியர்களின் கோரிக்கை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகள் இடம்பெறும் சாத்தியம் உள்ளது.

எனவே, மீண்டும் ஒரு கொத்தணி உருவாகாமல் இருப்பது தடுக்கப்பட வேண்டும். பாராளுமன்ற அமர்வை நான்கு நாட் களுக்கு நடத்துமாறு வலியுறுத்தினோம். எனினும், இரு நாட்கள் மட்டுமே நடத்தப்படுகின்றது. ஆனால், மதுபான சாலைகள் எல்லா நாட்களிலும் திறக்கப்பட்டுள்ளன-என்றார்.

# துறைமுகத்தில் தேங்கி கிடக்கும் உணவு பொருட்களை விடுவிக்குக!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்பு

கொழும்பு, செப். 25
துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடனடியாக விடுவிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

“சூம்” தொழில்நுட்பம் ஊடாக நேற்று இடம்பெற்ற வாழ்க்கை செலவு பற்றிய அமைச்சரவை உபகுழு கூட்டத்தில் அலரி மாளிகையில் இருந்து பங்கேற்றபோதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் வாழ்க்கை செலவு குறித்து கவனம் செலுத்தி பிரதமர், இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு இவ்வாறு பணித்துள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இவ்வாறு விடுவிக்கப்படும் அத்தியவசிய உணவுப் பொருட்களை துரிதமாக சதொச மற்றும் அத்தியவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்களின் ஊடாக மக்களுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு அறிவுறுத்தினார்.

அரிசி உள்ளிட்ட அத்தியவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி சந்தைக்கு வெளியிடுவதற்கான பொறுப்பை வர்த்தக அமைச்சும், விவசாயத் துறை அதிகாரிகளும் ஏற்க வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் நிறைவேற்று பணிப்பாளர் தனது இராஜினாமை அறிவித்து முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு தான் முன்வைத்த முறைப்பாட்டை துரித கதியில் விசாரிக்குமாறு வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன இதன்போது பிரதமரை கேட்டுக் கொண்டார்.

இதற்கமைய குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பிரதமர் அச்சந்தர்ப்பத்திலேயே பொலிஸ்மா அதிபருக்கு தொலைபேசி ஊடாக அறிவித்தார். (ஐ)

# பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர் அழகியல்பாட செயல்முறை பரீட்சை

கொழும்பு, செப். 25
2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டன.

கோவிட்-19 பரவல் காரணமாக, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின், அழகியல் பாடநெறிக்கான செயன்முறைப் பரீட்சைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

எனவே, செயன்முறைப் பரீட்சைகள் தவிர்ந்த ஏனைய பாடநெறிகளுக்கான பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர், செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்பட்டு, அதன் பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 200இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகள் ஒக்ரோபரில் திறக்கப்படும்

கொழும்பு, செப். 25
நாடு முழுவதும் உள்ள 200 இற்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை திறப்பதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, ஒக்ரோபர் மாத இரண்டாம் வாரத்தில் இவ்வாறு பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவானது எதிர்வரும் முதலாம் திகதி நீக்கப்பட்டதன் பின்னர், அனைத்துப் பாடசாலைகளிலும் தொற்று நீக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப் பதற்கும் கல்வியமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்திய பின்னரே பாடசாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென முன்னதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தேசிய வளங்கள் ஒருபோதுமே விற்பனை செய்யப்படமாட்டாது



## அமைச்சர் ரோஹித கூறுகிறார்

கொழும்பு, செப். 25

"இந்த அரசாங்கத்தின்கீழ் தேசிய வளங்கள் ஒரு போதும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படமாட்டாது." என அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

எனினும், நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு முதலீடு அவசியம். அதற்கான வாய்ப்பை வழங்குவது தவறான நடவடிக்கை அல்ல எனவும் அவர் கூறினார்.

இல்லாத விடயமொன்றை உருவாக்குவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. நாட்டு வளங்களை விற்பதற்கான நிகழ்ச்சி நிரல் எம்மிடம் இல்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# சதொசவில் நடந்த ஊழல்களை ஜனாதிபதியிடம் சொல்வேன்!

## நுகர்வோர் விவகார அதிகாரசபையின் முன்னாள் இயக்குநர் கூறுகின்றார்

கொழும்பு, செப். 25

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் நிறைவேற்று இயக்குநர் பதவியில் இருந்து அண்மையில் விலகிய துஷான் குணவர்த்தன, இன்று சனிக்கிழமை ஜனாதிபதியை சந்தித்து சதொச ஊழல் தொடர்பான தகவல்களை வழங்கவுள்ளார் என கூறினார்.

அதற்கான அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டார்.

ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து ஜனாதிபதியிடம் எழுத்துமூலம் அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார் என்றும் குணவர்த்தன கூறினார்.

அந்த ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து தேவையான நடவடிக்கை எடுப்பது அதிகாரிகளின் கடமை என்று அவர் மேலும் தெரிவித்தார். தான் முன்பு சட்டமா அதிபரை சந்தித்து எரிவாயு விவகாரம் தொடர்பாக உண்மைகளை முன்வைத்தார் என்றும், அதிகாரிகளிடம் இருந்து எதிர்ப்புகளைப் பெற்றார் என்றும் அவர் கூறினார்.



# சந்நிதியான் ஆச்சிரமம் உதவி

யாழ்ப்பாணம், செப். 25

சந்நிதியான் ஆச்சிரமத்தால் கரணவாய் வடக்கு - கொற்றாவத்தை கிராமத்துக்கு அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கோவிட் - 19 இடர் கால நிவாரண உதவித் திட்டத்துக்கு அமைவாக கரவெட்டி பிரதேச செயலாளர் நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட கரணவாய் வடக்கு - கிராம சேவையாளர் பிரிவு ஜே/360 இல் உள்ள கொற்றாவத்தை கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காக ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (அ)

# யாழ். கோவிட் சிகிச்சை நிலையங்களுக்கு றோட்டறி, இன்னர்வீல் கழகங்கள் உதவி

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். போதனா வைத்தியசாலையின் பரிபாலனத்துக்கு உட்பட்ட கோவிட் 19 சிகிச்சை நிலையங்களின் பாவனைக்கென ஒரு தொகுதி முகக் கவசங்கள் மற்றும் நோயாளர்களுக்கான யோக்கட், பழங்கள் உட்பட சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பு மத்தி றோட்டறிக் கழகத் தலைவர் றொட்டேறியன் அபயன் விநோதன் மற்றும் கொழும்பு நகர் மத்தி இன்னர்வீல் கழகத் தலைவர் திருமதி ஜெயந்தி விநோதன் ஆகியோரின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபனால் இந்தப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.



இதன்போது , கோப்பாய் கோவிட் 19 சிகிச்சை நிலையத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், போதனா வைத்தியசாலை திட்டமிடல் வைத்திய அதிகாரியுமான மருத்துவர் எஸ். சிவபாதமூர்த்தி, போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களான மருத்துவர் எஸ். ஜமுனாநந்தா, எஸ். சிறிபவானந்தராஜா, கணக்காளர் எஸ். பிரசாந் மற்றும் யாழ்பாணம் றோட்டறிக் கழகம், சுன்னாகம் றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (அ-3)

# பொதுப்போக்குவரத்துக்கான வழிகாட்டல் கோவை வெளியீடு

கொழும்பு, செப். 25

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் பொதுப்போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படும் என கூறப்படுகின்றது.

இந்நிலையில் அதற்கான வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்டுள்ளதாக அனைத்து மாகாண போக்குவரத்து அதிகார சபைகளின் தலைவர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேலும் அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நிவாரணப் பொதியை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் இணைப்பாளர் நிலந்த ஏக்கநாயக்க கூறி யுள்ளார்.



# சட்டவிரோதமாக எடுத்துவந்த மஞ்சள் சிக்கியது

கொழும்பு, செப். 25

இலங்கையினால் இறக்குமதி மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள மஞ்சள் மற்றும் ஏலக்காய் உள்ளிட்டவற்றை எடுத்துவரும் சட்டவிரோத செயல்பாடு ஒன்றை விமான நிலைய சுங்கத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் 472 கிலோகிராம் மஞ்சள், 352 கிலோகிராம் ஏலக்காய் மற்றும் பெருந்தொகையான மருந்துப் பொருள்களும் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட பொருட்களின் சந்தைப் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாய் என சுங்கத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், சுங்கத்தினர் குறித்த பயணிகளிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கெரவலப்பிட்டி விவகாரம் அபாய சங்கு ஊதுகிறது சு.க.

கொழும்பு, செப். 25

கெரவலப்பிட்டி மின் உற்பத்தின் நிலையத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு வழங்குவது பாரதூரமான விடயமாகும் என சிறீலங்கா சுதந்திரக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் தமது கட்சி பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில், எதிர்காலத்தில் ஜனாதிபதியையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

தேசிய வளங்களை விற்பனை செய்வதற்காக எமது அரசாங்கம் ஆட்சிக்கு வரவில்லை. எனவே, இவ்விவகாரம் தொடர்பில் உரிய தீர்மானம் எடுக்கப்படும். பிழைகள் இருப்பின் திருத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

# தேசிய பாதுகாப்பு நல்ல நிலையில்!



## டிலான் பெரேரா கூறுகிறார்

கொழும்பு, செப். 25

நாட்டுக்குள் தேசிய பாதுகாப்பு நல்ல நிலைமையில் தற்போது உள்ளதென பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவரை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக மாற்றுவதற்கு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் முயன்று வருகின்றனர் எனவும் டிலான் பெரேரா கூறினார்.

அவர்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் கத்தோலிக்க திருச்சபைகளுக்கும் இடையே பதற்றத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் கவலை வெளியிட்டார்.

ஆனாலும், உண்மையில் தேவைப்படுவது 10- 15 வருடகாலத்துக்கான தேசிய நிகழ்ச்சி நிரலாகும் என அவர் கூறினார். (அ)

# அரசு அடக்குமுறையை பிரயோகிப்பது தமிழர் ஒன்றுபடுவதை விரைவுபடுத்தும்!

## சிறிகாந்தா எச்சரிக்கை

கொழும்பு, செப். 25

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு அடக்குமுறையை பயன்படுத்துவது, பிரிந்து நிற்கும் தமிழ் மக்கள் ஒரே கொடியின் கீழ் மீண்டும் அணி திரள்வதை விரைவு படுத்தும் என தெரிவித்துள்ளார் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா.

தியாகி திலீபனின் நினைவஞ்சலியில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கைது செய்யப்பட்டதை கண்டித்துள்ள அவர்,

"அடக்குமுறையை பிரயோகித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்து முயற்சிப்பது ஒரு போதும் வெற்றியளிக்காது. பிரிந்து நிற்கும் தமிழ் மக்கள் ஒரே கொடியின் கீழ் மீண்டும் அணி திரள்வதை அது விரைவு படுத்தும்" என தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் அறிவிப்பு குறித்து தமிழர்களின் பிரதிபலிப்பு என்ன?

■ மீரா ஸ்ரீனிவாசன்

இலங்கையில் போர்க்கால பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்னைகள் குறித்து பேச்சுகள் நடத்துவதற்கு புலம்பெயர் தமிழ் சமூகத்தை அழைக்கப்போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் நியூயோர்க்கில் வெளியிட்ட அறிவிப்பு தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை விடவும் ஐயுறவு மனப்பான்மையையே ஏற்படுத்தியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸுடன் நடத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் உள்நாட்டு பிரச்னைகள் உள்நாட்டு பொறிமுறைகள் மூலமாகவே தீர்க்கப்படவேண்டும் என்று கூறினார். இது விடயத்தில் பேச்சு நடத்துவதற்கு புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் அவர் கூறியதாக ஜனாதிபதி செயலக ஊடக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள பல அமைப்புக்களின் உறுப்பினர்களை பயங்கரவாதிகள் என்று கூறி ஆறு மாதங்களுக்கு முன்னர் தடைசெய்த அரசாங்கத்தின் ஜனாதிபதியிடமிருந்து வந்ததால் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ராஜபக்ஷ நிருவாகம் புலம்பெயர் தமிழ் சமூகத்தின் மத்தியில் உள்ள குழுக்களை " புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள்" என்று திரும்பத்திரும்ப குறிப்பிட்டதுடன் அவை புலிகளின் பிரிவினைவாத போராட்டத்தை மீள்விக்க முயற்சிக்கின்றன என்று குற்றஞ்சாட்டியும் வருகிறது.



**புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் பேச்சு**

**வரவேற்கக்கூடிய சமிக்ஞை**

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் பேச்சு நடத்தவிரும்புவது நிச்சயமாக ஒரு முற்போக்கான நகர்வு. நாம் அதை வரவேற்கிறோம் என்று உலக தமிழர் அமைப்பின் பேச்சாளரான சுரேன் சுரேந்திரன் கூறினார். இந்த அமைப்பு வட அமெரிக்கா, ஐரோப்பா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவில் உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

"இலங்கையில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தங்களுடன் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுக்கும்போதெல்லாம் அற்ப காரணங்களைக் கூறி அதை தட்டிக்கழிக்கும் ஜனாதிபதி இப்போது புலம்பெயர் தமிழ்ச் சமூகமாகிய எங்களுடன் பேச்சு நடத்த விரும்புவதாக நியூயோர்க்கில் இருந்து அறிவித்திருக்கிறார்" என்று சுரேந்திரன் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார். உலக தமிழர் அமைப்பு உட்பட புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள அமைப்புக்களை அரசாங்கம் தடைசெய்த சில மாதங்களில் ஜனாதிபதியிடம் காணப்படும் திடீர் மனமாற்றத்தை சுரேந்திரன் சந்தேகிக்கிறார்.

> **"புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள பல அமைப்புக்களின் உறுப்பினர்களை பயங்கரவாதிகள் என்று கூறி ஆறு மாதங்களுக்கு முன்னர் தடைசெய்த அரசாங்கத்தின் ஜனாதிபதியிடமிருந்து வந்ததால் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜூன் மாதம் போரில் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு தமிழர்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகப்பெரிய கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பை சந்திக்கத் திட்டமிட்டிருந்தார்.

அந்த சந்திப்பு பற்றிய அறிவிப்பு கவனத்தை பெரிதும் ஈர்த்தது.ஏனென்றால், 88 வயதான மூத்த தமிழ் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புடன் கோட்டாபய முதன்முதலாக நடத்தவிருந்த சந்திப்பாக அது அமையவிருந்தது.கணிசமான அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் மூலமாக தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்து வருகின்றார்.

ஆனால், அந்த சந்திப்பு பிற்போடப்பட்டது.பேச்சு நடத்தப்படக் கூடிய அடுத்த திகதி பற்றி எந்த அறிவிப்பும் இல்லை.

அதேவேளை, புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் பேச்சு நடத்தத்தயாராக இருப்பதாக ஜனாதிபதி விடுத்த அறிவிப்பில் நம்பிக்கை வைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை என்பது அரசியல் அவதானிகளின் பரவலான அபிப்பிராயமாக இருக்கிறது.

நியூயோர்க்கில் ராஜபக்ஷ அண்மையில் வெளியிட்ட அறிவிப்பை 'திசைதிருப்பும் தந்திரோபாயம்' என்று வர்ணிக்கும் மூத்த பத்திரிகையாளரும் அரசியல் அவதானியுமான வீரகத்தி தனபாலசிங்கம் இலங்கைத் தழிழர்களின் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகள் உறுதியாக ஆதிரித்து குரல்கொடுத்து வந்தாலும், அவர்கள் ஒரு கட்டுறுதியான அரசியல் சக்தியாக இல்லை என்று கூறுகிறார். "அவர்களை இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக கருதவும் முடியாது. இலங்கையில் இருந்து வெளியேறிய அவர்களில் பெரும்பான்மையானவர்கள் வேறு நாடுகளில் குடியுரிமையைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள்" என்று அவர் 'தி இந்து' வுக்கு கூறினார்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் சர்வதேச சமூகத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக புலம்பெயர் தமிழர்களை நம்பியிருக்கிறார்கள். ஆனால், பல புலம்பெயர் அமைப்புகள் தீவிரவாத நிலைப்பாடுகளைக் கொண்டவயாக இருக்கின்றன. நாட்டில் உள்ள மிதவாத தமிழ் அரசியல்வாதிகளினால் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தயங்குகின்ற ஜனாதிபதி புலம்பெயர் தமிழ்ச் சக்திகளுடன் எதைப் பேசப்போகிறார்? வெளிநாட்டு முதலீடுகளைப் போன்ற விடயங்கள் பற்றி அவர்களுடன் ஜனாதிபதி பேசலாம்.

இலங்கையில் தமிழர் பிரச்னைக்கு நியாயபூர்வமான அரசியல் இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டுவதற்கு பலம்பெயர் தமிழ்ச்சமூகம் உதவி செய்யலாம். ஆனால், அரசியல் தீர்வொன்றை காணும் முயற்சிகளில் முன்னணி சக்தியாக புலம்பெயர் தமிழர்கள் ஒருபோதும் இருக்கமுடியாது.

உள்நாட்டில் காண வேண்டிய தீர்வுக்கு உள்நாட்டுப் பொறிமுறையே அவசியம் என்று கூறுகின்ற ஜனாதிபதி ராஜபக்ஷ புலம்பெயர் தமிழ் சமூகத்துடன் பேச விரும்புகிறார்.

இனப்பிரச்னை என்று வரும்போது ஜனாதிபதி தமிழ் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளுடனேயே முதலில் பேசவேண்டும். அதேவேளை,தமிழ்ப் பிரதிநிதிகளும்கூட ஒருமித்த அணுகுமுறையுடன் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் அணுகமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இது தமிழ் மக்களின் துரதிர்ஷடமாகும் என்று தனபாலசிங்கம் கூறினார்.

**தி இந்து**

ஈழநாடு






# மெல்பேர்னில் கலகம்

■ நியூசிலாந்து சிற்சபேசன்

பட்ட காலே படும் என்னும் பேச்சுவழக்குச் சொல்லாடலையே மெல்பேர்ன் சம்பவங்கள் நினைவூட்டுகின்றன. டெல்டா தொற்று எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. அதனால் பொதுமுடக்கம் தொடர்கின்றது. அது தொடர்பிலான எதிர்ப்பு கலகமாக மாறுகின்றது. போதாக்குறைக்கு நிலநடுக்கமும் ஏற்பட்டிருக்கின்றது.

மெல்பேர்னுக்கு வடக்கே 200கிலோமீற்றர் தொலைவிலுள்ள மான்ஸ்பீஃல்ட் பகுதியிலே, செப்ரெம்பர் 22ஆம் திகதி காலை வேளையில், நில நடுக்கம் ஏற்பட்டது. அஃது ரிக்டர் அளவுகோலில் ஆறு புள்ளியாகும். அதனைத் தொடர்ந்து சிறிய அதிர்வுகளும் ஏற்பட்டன. நிலநடுக்கம் மெல்பேர்னுக்குப் பரிச்சயமானதல்ல. அதனால் மக்களிடையே கலக்கம் ஏற்பட்டது. சிலகட்டிடங்களில் சேதாரங்கள் ஏற்பட்டன. அவற்றின் ஸ்திரத்தன்மை கேள்விக்குள்ளாகியது. ஆனால், பாரிய சேதாரங்கள் ஏற்படவில்லை. உயிராபத்து இருக்கவில்லை. தலைக்குவந்தது தலைப்பாகையுடன் போனதே ஆசுவாசமாகியது.

மறுவளத்தில், டெல்டா தொற்று எண்ணிக்கை அதிகரிக்கின்றது. பொதுமுடக்க நடைமுறைகள் விட்டகுறை தொட்டகுறையாகத் தொடர்கின்றன. அதனால் மெல்பேர்ன் வாசிகள் அயர்ச்சியடைகின்றனர். தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான கடுமையான பிரயாசைகளை அரசு மேற்கொள்கின்றது.

டெல்டா தொற்றுப் பரவலின் வழித்தடங்களிலே கட்டுமானத்துறையும் (கன்ஸ்டிரக்ஷன்) ஒன்றாக அடையாளமாகியுள்ளது. அதனால், அரசின் கவனம் கட்டுமானத்துறையில் குவிந்திருக்கின்றது. கட்டுமானங்களிலே டெல்டா பரவலைக் கட்டுப்படுத்துகின்ற விதிமுறைகள் முழுமையாக அனுசரிக்கப்படுவதில்லை. ஒரே காலப்பகுதியில் பல்வேறு இடங்களிலே கட்டுமானத்தொழிலாளர் வேலை செய்கின்றனர். அதனால் அதிகமான இடங்களிலே நடமாடுகின்றனர். கட்டுமானத்திலே பணி செய்வோரின் எண்ணிக்கையை அரசு மட்டுப்படுத்தியது. மெல்பேர்ன் பெருநகர் மற்றும் மாநிலத்தின் பிராந்தியங்களிடையேயான கட்டுமானத்தொழிலாளரின் போக்குவரவு விதிமுறைகளை அரசு இறுக்கமாக்கியது. அரசின் முயற்சிகளுக்கு போதிய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. தொற்றுப்பரவல் அதிகரிப்பிலே கட்டுமானத்துறையும் ஒருபங்காளி என்பது கண்டறியப்பட்டது. அதன்பின்னர் அரசினால் வாளாவிருக்கமுடியவில்லை. கட்டுமானங்களை இரண்டு வாரங்களுக்கு முற்றுமுழுதாக முடக்குவதாக விக்ரோரியா அரசு அறிவித்தது. மருத்துவச் சேவையுடன் தொடர்புடைய அத்தியாவசிய கட்டுமானங்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது.

அரசினுடைய அறிவிப்பு லேசாக எடுக்கப்பட்ட தீர்மானமல்ல. மூன்று இலட்சம் வரையான கட்டுமானத் தொழிலாளர் பாதிக்கப்படுவர் என்பதையும், தினசரி 500 மில்லியன் டொலர் வரையான இழப்பை கட்டுமானத்துறை சந்திக்கும் என்பதையும் அரசு உணராமலில்லை. அதேசமயத்தில், ஐந்து மில்லியன் மெல்பேர்ன்வாசிகளையும், பரந்துபட்ட அவுஸ்திரேலியா சமூகத்தையும் டெல்டா பரவல் அச்சுறுத்தலிலிருந்து பாதுகாக்கவேண்டிய பொறுப்பை அரசு தட்டிக் கழிக்கவில்லை.

கூடவே, கட்டுமானங்களை இரண்டு வாரங்களின் பின்னர் மீள ஆரம்பிப்பதற்கான வழித்தடத்தையும் அரசு அறிவித்திருந்தது. அதிலே இரண்டு நிபந்தனைகள் முக்கியமானதாகும். ஒன்று, டெல்டா பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான பொதுசுகாதார விதிமுறைகளை கட்டுமானத்து றையிலே முழுமையாக நடை முறைப்படுத்தவேண்டும் என்ப தாகும். மற்றையது, கட்டுமானத் தொழிலாளர் வேலைக்குத் திரும்புவதற்கு ஆகக்குறைந்தது முதலாவது டோஸ் (தவணை) தடுப்பூசியையேனும் ஏற்றியிருக்கவேண்டும் என்பதாகும்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் வேலைசெய்வதற்கும் தடுப்பூசி ஏற்றியிருக்கவேண்டும் என்பதான ஒரு நிலைப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அதுதொடர்பில், சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் வெளிப்படையான எதிர்ப்பு ஏற்படவில்லை. ஆனால், கட்டுமானத்துறை அப்படியல்ல. அவுஸ்திரேலியாவிலே தொழிற்சங்க மயப்படுத்தப்பட்ட துறைகளில் கட்டுமானம் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன், கட்டுமானத்தொழி லாளர்கள் உடல் உழைப்பாளிகள். இளையவயதினரே கணிச மானோராகும். தடுப்பூசி நிபந்தனையை கட்டு மானத் தொழிலாளர் நிராகரித்தனர். அதனை அரசு ஏற்கவில்லை. அதனால் செப்ரெம்பர் 20இல் கட்டுமானத் தொழிலாளரின் போராட்டம் ஆரம்பமாகிது.

தடுப்பூசிக்கு எதிரான நிலைப்பாட்டை அவுஸ்திரேலியத் தொழிற்சங்கங்கள் வெளிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அதேவேளையில், வேலைசெய்வதற்கு தடுப்பூசி ஏற்றியிருக்கவேண்டும் என்னும் அரசின் முன்நிபந்தனைத் தோரணையை தொழிற்சங்கங்கள் ரசிக்கவில்லை. காரணம்: அஃது தொழிற்சங்கங்களின் அடிமடியிலேயே கைவைப்ப தாகின்றது. முதலாளியின் அடாவடித்தனங்களிலிருந்து தொழிலாளியை பாதுகாக்கின்ற ஆபத்பாந்தவனே தொழிற்சங்கம் என்பதே பாரம்பரியமான சிந்தாந்தமாகும். அதுவே தொழிற்சங்க அமைப்பின் அத்திவாரமாகும். அந்தவகையிலேயே தடுப்பூசியைக் கட்டாயமாக்குகின்ற அரசின் நடவடிக்கையை தொழிற்சங்கங்களினால் கடந்துபோக முடியவில்லை. இதிலே இன்னுமொரு சிக்கலும் உண்டு. லேபர் கட்சியே பலமாநிலங்களை ஆட்சி செய்கின்றது. லேபர் கட்சியின் அடித்தளமே தொழிற் சங்க இயக்கமாகும். லேபர் கட்சியின் பல தலை வர்கள் தொழிற்சங்க இயக்கம் வழியாகவே வளர்ந்தவர்களாகும். அந்தவகையிலே, கட்டாயத் தடுப்பூசி விவகாரத்தில் தொழிற்சங்கங்களும் லேபர் கட்சியினரும் இரு தலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கின்றனர்.

**“ கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் வேலைசெய்வதற்கும் தடுப்பூசி ஏற்றியிருக்கவேண்டும் என்பதான ஒரு நிலைப்பாடு ஏற்பட்டிருக்கின்றது. அது தொடர்பில், சுகாதாரம், கல்வி போன்ற துறைகளில் வெளிப்படையான எதிர்ப்பு ஏற்படவில்லை. ஆனால், கட்டுமானத் துறை அப்படியல்ல. அவுஸ்திரேலியாவிலே தொழிற்சங்க மயப்படுத்தப்பட்ட துறைகளில் கட்டுமானம் குறிப்பிடத்தக்கதாகும்**

கட்டுமானத்துறையின் முடக்கத்தினால் உந்தித்தள்ளப்பட்ட கட்டுமானத் தொழிலாளரின் ஆர்ப்பாட்டம் தடுப்பூசிக்கு எதிரானதாக உருமாறியது. பொதுமுடக்கதுக்கு எதிரானதாகத் திரிபடைந்தது. ஆர்ப்பாட்டத்தின் இரண்டாவது தினத்திலே பொலிசார் மீதான தாக்குதல் சூழ்நிலையைக் கொதிநிலைக்குத் தள்ளியது. மெல்பேர்னின் அதிமுக்கிய தரைப்போக்குவரத்துப் பாதையே வெஸ்ட்கேட் பாலமாகும். அதனை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். அதனால் சூழ்நிலை அபாயக்கட்டத்தைத் தொட்டது அவுஸ்திரேலியாவிலே நகரமொன்றை ஊடறுத்துச் செல்கின்ற அதிவேக மோட்டார் வாகனப் பாதைக ளிலே, அதியுச்சமான பாவனையை வெஸ்ட்கேட் பாலம் கொண்டதாகும். இரண்டு இலட்சம் வரையான வாகனங்கள் தினசரி அந்தப்பாதையில் பயணிக்கின்றன. அதனை முடக்குவது, ஒருவகையில், மெல்பேர்ன் நகரின் சீரான இயக்கத்தைத் தடுப்பதற்கு ஒப்பானதாகும்.

அந்தவகையிலே கட்டுமானத் தொழிலாளரின் ஆர்ப்பாட்டம் சனநாயக எதிர்ப்பின் எல்லைகளைக் கடந்து கலகமாகியது. டெல்டா தொற்றுப்பரவல் அதிகரிக்கின்ற காலகட்டத்திலே பெருந்திரளானவர்கள் கூடியமை சட்டம்ஒழுங்குப் பிரச்னையாகியது. ஆர்ப்பாட்டத்தின் மூன்றாவது தினமான செப்ரெம்பர் 22ஆம் திகதி நிலநடுக்கத்தினால் மெல்பேர்ன் அதிர்ந்தது. அதன்போதுகூட, கட்டுமானத் தொழிலாளரின் ஆர்ப்பாட்டம் வேகமிழக்கவில்லை. மாறாக வீரியமடைந்தது. போர்நினைவிடத்திலே கலகக்காரர்கள் குவிந்தனர். தடுப்பூசி வழங்கும் மையத்திலே கலகம் விளைவித்தனர். சுகாதாரப் பணியாளர்களை தாக்கினர். அதனால் பொலிஸாரின் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. இத்தகைய சூழ்நிலைகளினால் மெல்பேர்ன் கலகமொன்றிலே சிக்கித்தவிக்கின்றது. ■



ஈழநாடு

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
விடைகள் - I,II

கல்வி tv CHANNEL

## முன்னோடி வினாத்தாள் 2 - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (2) | 4. (2) | 5. (3) | 6. (3) | 7. (1) |
| 8. (1) | 9. (3) | 10. (3) | 11. (1) | 12. (2) | 13. (2) | 14. (2) |
| 15. (1) | 16. (2) | 17. (1) | 18. (2) | 19. (3) | 20. (1) | 21. (2) |
| 22. (2) | 23. (3) | 24. (2) | 25. (3) | 26. (3) | 27. (3) | 28. (1) |
| 29. (2) | 30. (2) | 31. (2) | 32. (2) | 33. (1) | 34. (3) | 35. (3) |
| 36. (2) | 37. (3) | 38. (1) | 39. (2) | 40. (3) | | |

## முன்னோடி வினாத்தாள் 2 - II

1. (i) பறவைகளின் கானம் (1 புள்ளி)
   (ii) தேனைப் பருக (1 புள்ளி)
   (iii) பனித்துளிகள் (1 புள்ளி)
   (iv) அங்குமிங்கும் (1 புள்ளி)
   (v) மகிழ்ச்சி (1 புள்ளி)
   (vi) இளஞ்சூரியனின் பொன்னொளிபட்டு (1 புள்ளி)
2. (1) உண்டான் (1 புள்ளி)
3. பத்திரிகைகள் வாசிப்பதால் எமது பொது அறிவு வளர்ச்சி அடைகிறது. (1 புள்ளி)
4. (i) ✓ (1 புள்ளி)
   (ii) ✓ (1 புள்ளி)
   (iii) × (1 புள்ளி)
   (iv) × (1 புள்ளி)
5. (i) வெட்டென (1 புள்ளி)
   (ii) பேராசை பெரு நட்டம் (1 புள்ளி)
6. மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும். (1 புள்ளி)
7. (i) அறிவுரை (1 புள்ளி)
   (ii) துர்நாற்றம் (1 புள்ளி)
   (iii) ஊறு (1 புள்ளி)
8. சூரியன் உதயமாகும். (1 புள்ளி)
9. (i) நாற்று (1 புள்ளி)
   (ii) கன்று (1 புள்ளி)
10. ஒழுக்கம் தவறாமல் நேர்வழியில் நட (1 புள்ளி)
11. (i) மின்னல் (1 புள்ளி)
    (ii) வரலாறு (1 புள்ளி)
12. (i) Tree / tree / TREE (1 புள்ளி)
    (ii) Lion / lion / LION (1 புள்ளி)
13. (i) That is my car (1 புள்ளி)
    (ii) I am going to school (1 புள்ளி)
14. அதிபர் (1 புள்ளி)
15. பத்தன்ன (1 புள்ளி)
16. 3057 (2 புள்ளிகள்)
17. C (2 புள்ளிகள்)
18. 25, 31 (2 புள்ளிகள்)
19. 2470, 2765, 4125, 4756 (2 புள்ளிகள்)
20. 76 (2 புள்ளிகள்)
21. (ஏதேனும் இரண்டு பகுதிகளுக்கு நிறந்தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.) (2 புள்ளிகள்)
22. (i) 5415 (2 புள்ளிகள்)
    (ii) 1108 (2 புள்ளிகள்)
23. (i) கனவுரு (1 புள்ளி)
    (ii) 6 / ஆறு (1 புள்ளி)
24. 22:20 (2 புள்ளிகள்)
25. 18, 650 (2 புள்ளிகள்)
26. 206 (2 புள்ளிகள்)
27. 1, 70 (2 புள்ளிகள்)
28. 25 (2 புள்ளிகள்)
29. (i) 169, 00 (2 புள்ளிகள்)
    (ii) 500g (2 புள்ளிகள்)
    (iii) 250g (2 புள்ளிகள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31. (2) | 32. (2) | 33. (3) | 34. (2) | 35. (1) | 36. (1) | 37. (3) | 38. (1) | 39. (3) |
| 40. (2) | 41. (2) | 42. (2) | 43. (1) | 44. (1) | 45. (1) | 46. (3) | 47. (3) | 48. (2) | 49. (2) |
| 50. (2) | 51. (1) | 52. (2) | 53. (2) | 54. (1) | 55. (2) | 56. (2) | 57. (1) | 58. (3) | 59. (2) |

(30 புள்ளிகள்)

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. பறவைகள் விலங்குகள் மீது நாம் ஏன் அன்பு காட்ட வேண்டும் என்ற வினாவுக்கு விடையாக அமையும் வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். (6 புள்ளிகள்)

# படுகொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை வழங்குவீர்கள்?

## ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு கேள்வி

கொழும்பு, செப். 25

"காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ மரணச்சான்றிதழ் கொடுப் பதானால் அவர்களைப் படு கொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகின்றார்?'"

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கல நாதன் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சரணடைந்தவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென ஐ.நா. சாசனம் உள்ள நிலையில் ஐ.நாவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐ. நா. பொதுச் செயலரிடமே இலங்கையில் காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார். அவ்வாறானால் இலங்கையில் கண்கண்ட சாட்சியங்களுடன் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டு விட்டனர் என்றே ஜனாதிபதி கூறுகின்றார்.

இலங்கையில் காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கப் போவதாகக் கூறும் ஜனாதிபதி, அந்தக் காணாமல்போனவர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போகின்றார்? காணாமல்போனவர்களுக்கு ஜனாதிபதி மரணச் சான்றிதழ் கொடுப்பதனால் அதற்குக் காரணமானவர்களுக்கு தண்டனையும் கொடுக்க வேண்டுமெனக் கோருகின்றேன்.

இலங்கை இராணுவத்திடம் கண்கண்ட சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மரணச்சான்றிதழ் கொடுப்பேன் என இந்த நாட்டின் ஜனாதிபதி ஐ. நா.வுக்குப் போய் கூறுகின்றார் என்றால் தமிழ் மக்களின் உயிர்களை அவர் எவ்வளவு தூரம் மலினமாம், துச்சமாகப் பார்க்கின்றார் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்" - என்றார். (இ)

# புத்தளத்தில் மீட்கப்பட்டுள்ளன மூன்று அரிய வகை ஆந்தைகள்



புத்தளம், செப். 25

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அலுவலகத்திலிருந்து அரிய வகை ஆந்தைகள் மூன்று மீட்கப்பட்டுள்ளன.

அலுவலக கூரையிலிருந்து இந்த மூன்று ஆந்தைகளும் கீழே வீழ்ந்துள்ளன.

அவை உயிருடன் மீட்கப்பட்டு புத்தளம் வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆந்தைகள் அரிய வகையைச சார்ந்தவை என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆந்தைகள் நிக்கவரெட்டிய கால்நடை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. (இ)

# வவுனியாவில் மேலும் 47 பேருக்கு தொற்று

வவுனியா, செப். 25

வவுனியா மாவட்டத்தில் மேலும் 47 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக கொரோனாத் தொற்று 47 நபர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# மதுபானங்களுடன் 7 பேர் மாட்டினார்கள்

கொழும்பு, செப். 25

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஏழு மதுபான சுற்றிவளைப்புகளில் எழுவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 560 லீற்றர் மதுபானமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 590 லீற்றர் கோடாவும் 4 செப்புக்கம்பியும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதானவர்களில் இருவர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உள்நாட்டில் நீதி கிடைக்காததாலேயே சர்வதேசத்தை நாடுகின்றனர் மக்கள்!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப்.25**

**நாட்டுக்குள் நீதி, நியாயம் கிடைக்காத படியால்தான் இலங்கையர்கள் தமது பிரச்னைகளை சர்வதேசத்துக்குச் எடுத்துச் செல்கின்றனர் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.**

இலங்கை அரசு ஐ. நாவில் கூறும் கதைகளும் நாட்டுக்குள் வெளியிடும் அறிக்கைகளும் ஒன்றுக்கொன்று முரணானவை என்றும் அக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐ.நாவில் ஜனாதிபதி வழங்கிய உத்தரவாதத்தை யதார்த்தமானதாக மாற்ற நாட்டுக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"இலங்கையர்களின் பிரச்னைகளுக்கு நீதி கிடைக்காமை காரணமாகவே சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்படாமை கத்தோலிக்க மக்களின் பிரச்னை மாத்திரமன்றி, ஒட்டுமொத்த இலங்கை மக்களினதும் பிரச்னையாகும்.

ஐ.நா. பொதுச்சபையில் ஜனாதிபதி கோட்டாபய. 'இலங்கையில் பயங்கரவாத வன்முறைகள் மீண்டும் இடம் பெற இடமளிக்கமாட்டோம்' என்ற உத்தரவாதத்தை வழங்கியமை தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆனால், சரியாக விசாரணைகளை மேற்கொண்டு பலியானவர்களுக்கு நீதியை நிலைநாட்டினால் மாத்திரமே மீண்டும் இத்தகைய சம்பவம் இடம் பெறுவதைத் தடுக்க முடியும்.

இனவாதத்தைத் தூண்டும் குழுக்களை வெளியில் போடுவதற்குப் பதிலாக, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணைகளை சரி வர மேற்கொள்ளுமாறு நாம் அழுத்தம் கொடுக்கின்றோம்" - என்றார். (இ)

# பாராளுமன்றத்தை மூடிவிட்டு இரவோடிரவாக ஒப்பந்தங்கள்

## சஜித் அணி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25

"மதுபானசாலைகளைத் திறந்து பாராளுமன்றத்தை மூடிவிட்டு இரவோடிரவாக இரகசிய ஒப்பந்தங்களை அரச தரப்பினர் கைச்சாத்திடுகின்றனர்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,



"கடந்த வருடத்திலும் இவ்வருடத்தில் இன்று வரையுமாக நாம் 25 பாராளுமன்ற நாட்களை இழந்து விட்டோம். நாட்டில் மதுபானசாலைகளைத் திறக்கிறார்கள். பாராளுமன்றத்தை மூடுகின்றார்கள். இவ்வாறு மூடிவிட்டு இரவோடிரவாக இரகசிய ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுகின்றனர்.

இந்த இரகசிய ஒப்பந்தங்கள் தொடர்பான உண்மைகள் வெளிவரக்கூடாது என்பதற்காகவே பாராளுமன்றத்தை மூடுகின்றனர்.

அமெரிக்காவுக்கு இரகசிய ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்ட கெரவலப்பிட்டிய மின்நிலைய ஒப்பந்தம் தொடர்பில் நாம் பேச வேண்டும். ஆனால், நான்கு நாள் அமர்வில் இரு நாட்கள் பாராளுமன்றம் மூடப்படுகின்றது. அவ்வாறானால் நாம் எப்படி உண்மைகளை மக்களுக்கு வெளிப்படுத்துவது?

வெளிநாடுகளில் சூம் தொழில்நுட்பம் மூலம் பாராளுமன்ற அமர்வுகள் நடத்தப்படுகின்றன. அதேபோன்று இங்கும் செய்ய முடியும்.

பாராளுமன்றத்தை மூடுவது பெரும் அநீதி. எனவே, இது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு பாராளுமன்றம் மூடப்படுவதற்கு நாம் எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்" - என்றார். (இ)

# ஊரடங்கு சட்டத்தை மீறி திறந்திருந்த 5 வர்த்தக நிலையங்கள் தனிமைப்படுத்தல்

வவுனியா, செப். 25



வவுனியாவில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி செயற்பட்டதாக பிரபல சுப்பர் மாக்கெற் உட்பட 5 வியாபார நிலையங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப் படுத்தப்பட்டன.

வவுனியாவில் கொரோனா பரவல் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படல் மற்றும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது செயற்படல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மக்களை ஒன்றுகூட்டி வியாபாரத்தில் ஈடுபட்டட வர்த்தக நிலையங் கள் சுகாதாரப் பிரிவினரால் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

அந்தவகையில், மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல சுப்பர் மார்க்கட், தர்மலிங்கம் வீதியில் இலத்திரனியல் விற்பனை நிலையம், குருமன்காடு பகுதியில் சுப்பர் மார்க்கெற் ஒன்று, ஹொரவப்பொத்தானை வீதியில் இரு வர்த்தக நிலையங்கள் என 5 வர்த்தக நிலையங்கள் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டன. (இ)

## பிரான்ஸ் செனட்டர்களின் தாய்வான் பயணத்தை நிறுத்த சீனா வலியுறுத்து!

பாரிஸ், செப். 25

பிரெஞ்சு செனட்டர்களின் தாய்வானுக்கான பயணத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பிரான்ஸிடம் சீனா கோரியுள்ளது.

சீன - பிரெஞ்சு உறவுகளையும் பிரான்ஸின் நற்பெயரையும் நலன்களையும் பாதிக்காதபடி தாய்வானுக்கான பயண முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பிரான்ஸில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உலகில் ஒரே சீனா மட்டுமே உள்ளது. தாய்வான் சீனாவின் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாகும். சீன மக்கள் குடியரசின் அரசாங்கம்தான் முழு சீனாவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே சட்ட ரீதியான அரசாங்கம். ஒரே சீனா கொள்கையை ஏற்பதே சர்வதேச நாடுகளுடனான சீனாவின் இராஜதந்திர உறவுகளுக்கு அடிப்படையானது என்றும் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

பிரெஞ்சு செனட்டர்களின் தாய்வானுக்கான பயணம் என்ன நோக்கத்தில் இருந்தாலும் அது ஒரே சீனா என்ற கொள்கையை தீவிரமாக மீறும் செயலாக அமையும். அது தாய்வானுக்கு சுதந்திரம் கோரும் பிரிவினைவாத சக்திகளுக்கு தூண்டுகோலாக அமையும் எனவும் சீன தூதரக செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சு செனட்டர்கள் குழு ஒக்ரோபரில் தாய்வானுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு ஒருவர் மரணம்; 13 பேர் காயம்!

நியூயோர்க், செப். 25

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தின் மெம்பிஸ் என்ற பகுதியில் பல்பொருள் அங்காடியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். 13 பேர் காயங்களுக்கு இலக்காகினர்.

நேற்று இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்களை பொலிஸார் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அத்துடன், அச்சத்தால் பதுங்கி இருந்தவர்களையும் மீட்டனர்.

எனினும், துப்பாக்கி சூட்டை நடத்திய நபர் இறந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், அவர் தற்கொலை செய்தார் என்று நம்பப்படுகின்றது. (ஐ)



## ஸ்பெயினில் பெருமழை பல நகரங்கள் வெள்ளத்தில்!

மட்ரிட், செப். 25

ஸ்பெயினில் வரலாறு காணாத மழை பெய்து வருகின்றது. இதனால், அந்த நாட்டின் முக்கிய நகரங்களான அண்டலூசியா, அல்மெண்ட்ரெஜோ உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் கார்கள் அடித்துச் செல்லப்படும் காணொலிகள், படங்களும் வெளியாகியுள்ளன. எனினும், இந்தப் பகுதிகளில் தொடர்ந்தும் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று கூறப்படுகின்றது. இதனால் தாழ்வான பகுதிகள் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்ளக்கூடும் என்று கூறப்படுகின்றது.

எனினும் பாதிப்புக்கள் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)



# சூடான், தென்சூடானில் வெள்ளம்; ஏழு இலட்சம் மக்கள் இடப்பெயர்வு

கார்ரோம், செப். 25

ஆபிரிக்க நாடுகளான சூடான், தென்சூடானில் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் சுமார் ஏழு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சூடான் கனமழை பெய்து வருகின்றது. இதனால் நீர்நிலைகள் நிரம்பி, ஆறுகளும் பெருக்கெடுத்துள்ளன. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அந்த நாட்டின் 18 மாகாணங்களில் 13 மாகாணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், அந்த நாட்டில் 2 இலட்சத்து 88 ஆயிரம் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

இதேபோன்று சூடானின் அயல் நாடான தென்சூடானிலும் சுமார் 4 இலட்சத்து 26 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. சபை கூறியுள்ளது. இவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன என்றும் அது கேட்டுள்ளது.

சூடானில் ஆயிரக்கணக்கான அகதிகளை தற்போது தங்கியுள்ள இடங்களிலிருந்து வேறு முகாம்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஏராளமானவர்கள் தெருக்களிலும் தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கான மாற்று இடங்களை தெரிவு செய்வது பெரும் சவாலாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை வெள்ளத்தால் 80 பேர் உயிரிழந்தனர் என்றும் , 35 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும் சூடான் நாட்டின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சூடானில் ஆண்டு தோறும் ஜூன் முதல் ஒக்ரோபர் வரை இடைவிடாமல் மழை பெய்யும். இதனால் சொத்துக்கள், உட்கட்டமைப்புகள் மற்றும் விளைநிலங்களில் உள்ள பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. கடந்த ஆண்டு மழை சீசனில் 9 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டனர். 140 பேர் உயிரிழந்தனர். மூன்று மாதம் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பூஸ்டர் தடுப்பூசி வழங்க அனுமதித்தது அமெரிக்கா

வாஷிங்டன், செப். 25

அமெரிக்காவில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பைசர் நிறுவனத்தின் பூஸ்டர் டோஸை வழங்க அமெரிக்க ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

அமெரிக்காவில் பைசர், மொடர்னா, ஜோன்சன் அன்ட் ஜோன்சன் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. பொதுவாக தொற்றை தடுக்க 2 டோஸ்கள் ஏற்றப்படுகின்றன. ஆனால், வைரஸ் திரிபுகள் காரணமாக பூஸ்டர் டோஸாக மூன்றாவது தடுப்பூசியை ஏற்ற அமெரிக்கா அனுமதியளித்துள்ளது.

முதல் கட்டமாக 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது டோஸ் பெற்ற 6 மாதங்கள் கழித்து மூன்றாவது டோஸை பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக நாடுகள் பலவற்றுக்கு தடுப்பூசி இன்னமும் கிடைக்காத நிலையில் பூஸ்டர் டோஸ் ஏற்றும் அமெரிக்காவின் அண்மைக்காலமாக உலக சுகாதார ஸ்தாபனம் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நோபல் பரிசு விழா இந்த ஆண்டும் ரத்து!

ஒஸ்லோ, செப். 25

கொரோனா தொற்று பரவல் அச்சத்தால் இந்த ஆண்டும் நோபல் பரிசு வழங்கும் விழா நிறுத்தப்படுவதாக நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

நோபல் பரிசு ஒவ்வோர் ஆண்டும் விஞ்ஞானம், மருத்துவம், பொருளாதாரம், இலக்கியம் என்பவற்றுக்காக வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டுக்கான பரிசுகள் ஒக் ரோபர் 4 முதல் 11ஆம் திகதி வரை அறிவிக்கப்படவுள்ளன. தொற்று அச்சத்தால் பரிசு வழங்கும் விழா நடைபெறாது.

பரிசு வழங்கும் நாளானா டிசம்பர் 10 ஆம் திகதி கடந்த ஆண்டு போலவே, ஸ்ராக்ஹோம், ஒஸ்லோ நகரங்களில் மெய்நிகர் வழியில் பரிசு வழங்கப்படும் என்று நோபல் அறக்கட்டளையின் இயக்குநர் விதர் ஹெல்ஜென் தெரிவித்துள்ளார். (ஐ)



## ஸ்பெயினில் எரிமலை சீற்றம் 84 நாள்கள் வரை நீடிக்கலாம்!

மட்ரிட், செப். 25

ஸ்பெயினின் வீஜா எரிமலை சீற்றம் 24 முதல் 84 நாட்கள் வரை நீடிக்கும் என்று கேனரி தீவுகளின் எரிமலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவின் லா பால்மாவில் உள்ள கும்ப்ரே வீஜா எரிமலை கடந்த 19ஆம் திகதி நெருப்பு குழம்பை கக்க ஆரம்பித்தது. எனினும், எரிமலை சீற்றத்தை முன்னரே கணித்தமையால் அந்தப் பகுதியிலிருந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர். இதனால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

எரிமலையில் இருந்து வெளியேறும் பெரும் புகை மூட்டம் அந்தப் பகுதிகளை மூடிமறைத்துள்ளது. இந்த எரிமலைச் சீற்றம் 24 முதல் 84 நாட்கள் வரை நீடிக்கலாம் என கேனரி தீவுகளின் எரிமலைகள் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த எரிமலை தற்போது தினமும் 6,140 முதல் 11,500 தொன் வரையான சல்பர் டயோக்சைட் ($SO_2$) வெளியிடுகிறது.

சல்பர் டயோக்சைட் விரைவில் நாட்டின் வான்பரப்பினுள் பிரவேசிக்கத் தொடங்கும் என்றும், அதனால் பல பகுதிகளில் அமில மழை பொழிய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,கேனரி தீவுகளில் வெடித்துள்ள எரிமலையில் இருந்து வெளியேறும் மாசு கலந்த புகை மண்டலம் பிரான்ஸின் வான்பரப்பை நோக்கி நகர்ந்துவருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# ரோஹித் சர்மா புதிய சாதனை!

டுபாய், செப். 25

கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா புதிய சாதனையை படைத்தார்.

இந்தப் போட்டியில் ரோஹித் சர்மா 33 ஓட்டங்களை எடுத்திருந்தார். அவர் 18 ஓட்டங்களை எடுத்திருந்தபோது புதிய சாதனையை படைத்தார். அதாவது, ஐ. பி. எல்லில் ஓர் அணிக்கு எதிராக ஆயிரம் ஓட்டங்களை குவித்த முதல் வீரர் என்பதே அந்த சாதனை.

கொல்கத்தா அணிக்கு எதிராக அவர் 29 இனிங்ஸ்களில் விளையாடி 1015 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவரின் சராசரி 46.13 ஆகும். அத்துடன், இந்த அணிக்கு எதிராக மட்டும் அவர் ஒரு சதமும் 6 அரைச்சதங்களும் அடித்து துள்ளார்.

இதேசமயம், ஓர் அணிக்கு எதிராக அதிக ஓட்டங்களை எடுத்த வீரர்கள் வரிசையில் டேவிட் வோர்ணர் இரண்டாவது இடத்தில் உள்ளார். அவர். பஞ்சாப் அணிக்கு எதிராக 943 ஓட்டங்களை எடுத்துள்ளார். (ஐ)

# மும்பையை வீழ்த்தியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்

டுபாய், செப். 25

வெங்கடேஷ் ஐயர், ராகுல் திரிபாதியின் அதிரடி ஆட்டத்தால் மும்பை இந்தியன்ஸ் அணியை 7 விக்கெட்களால் வீழ்த்தியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்.

ஐ. பி. எல். தொடரின் 35ஆவது போட்டி நேற்று முன்தினம் இரவு டுபாயில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

மும்பைக்கு தொடக்கம் கொடுத்த ரோஹித் சர்மா, குயின்ரன் டி கொக் இணை அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ரோஹித் 33 ஓட்டங்களையும், குயின்ரன் டி கொக் 55 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்கள் எவரும் சோபிக்கவில்லை.

இதனால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்களை பெற்றது.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் பந்துவீச்சில் லோக்கி பெர்குசன், பிரசித் கிருஷ்ணா ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.



இதன்படி, 156 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி 15.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி பெற்றது.

ராகுல் திரிபாதி - வெங்கடேஷ் ஐயர் இணை அதிரடியாக ஆடினர். ராகுல் திரிபாதி ஆட்டமிழக்காமல் 3 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 74 ஓட்டங்களையும், 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் வெங்கடேஷ் ஐயர் 53 ஓட்டங்களையும் குவித்தனர்.

மும்பை அணியின் பந்துவீச்சில் ஜஸ்ப்ரிட் பும்ரா 43 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினார். (ஐ)

# லா லிகா உதைபந்தாட்டம்; ரியல் மட்ரிட் அபார வெற்றி!



மட்ரிட், செப். 25

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா உதைபந்தாட்ட போட்டியில் ரியல் மட்ரிட் 6-1 என்ற கோல் கணக்கில் மல்லோர்காவை வீழ்த்தியது. இது ரியல் மட்ரிட்டுக்கு தொடர்ந்து 5ஆவது வெற்றியாகும்.

இந்தத் தொடரில் ரியல் மட்ரிட் அணி இதுவரை தோல்வியை சந்திக்கவில்லை. மொத்தம் 6 போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் ஓர் ஆட்டத்தை சமன் செய்துள்ளது. 16 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடத்தை தொடர்ந்து தக்க வைத்துள்ளது. மல்லோர்கா 2ஆவது தோல்வியை பெற்று 8 புள்ளிகளுடன் 10ஆவது இடத்தில் உள்ளது.

மாட்ரிட் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 3ஆவது நிமிடத்திலேயே மட்ரிட்டின் கோல் கணக்கை தொடங்கினார் கரிம் பென்ஸிமா. மல்லோர்கா வீரர் வால்ஜென்ட் பாஸ் செய்த பந்தை சக வீரர் கயா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றது தவறி, அந்தப் பந்து பென்ஸிமாவிடம் சிக்கியது. அதை அவர் மிகச் சாதுரியமாக கடத்திச் சென்று கோலடித்தார்.

தொடர்ந்து 24-ஆவது நிமிடத்தில் வினிசியஸ் கடத்திக் கொடுத்த பந்தை ரொட்ரிகோ கோலாக மாற்ற முயல, மல்லோர்கா கோல் காப்பாளர் ரய்னா அதைத் தடுத்தார். எனினும், அவரிடம் இருந்து மீண்டும் களத்துக்கு வந்த பந்தை துரிதமாக செயல்பட்டு கோல் கம்பத்துக்குள் தள்ளினார் ரியல் மட்ரிட் வீரர் மார்கோ அசென்சியோ.

சற்று ஆக்ரோஷம் காட்டிய மல்லோர்கா 25ஆவது நிமிடத்தில் தனது கோல் வாய்ப்பை எட்டியது. தொடக்கத்திலிருந்து தடுப்பாட்டத்தில் சற்று அலட்சியம் காட்டிய ரியல் மட்ரிட்டுக்கு இது பாடமாக அமைந்தது. மல்லோர்கா வீரர் ஹோப் பாஸ் செய்த பந்தை சக வீரர் லீ காங் இன் குறைந்த சவால்களையே எதிர்கொண்டு மிகத் துல்லியமாக பந்தை கோல் கம்பத்துக்குள் உதைத்தார்.

நெருக்கடியை உணர்ந்த ரியல் மட்ரிட் தரப்பில் மார்கோ அசென்சியோ 29ஆவது நிமிடத்தில் கோல் அடித்து முதல் பாதியிலேயே வித்தியாசத்தை 3-1 என அதிகப்படுத்தினார். 2ஆவது பாதியில் அவரே 55ஆவது நிமிடத்தில் பென்ஸிமா அடித்த அப்படியோ கோல் கம்பத்துக்குள் உதைத்து கோல் ஆக்கினார்.

பின்னர் பென்ஸிமா தனது பங்கிற்கு 78ஆவது நிமிஷத்தில் அலாபா உதவியுடன் ஒரு கோலடிக்க, இறுதியாக வினிசியஸ் உதவியுடன் இஸ்கோ 84-ஆவது நிமிடத்தில் கோலடிக்க, மீளவே முடியாத நிலைக்கு சென்ற மல்லோர்கா 1-6 என்ற கோல் கணக்கில் வீழ்ந்தது. (ஐ)

# கொல்கத்தாவுக்கு அபராதம் விதிப்பு!

டுபாய், செப். 25

20 ஓவர்களை வீச நீண்ட நேரம் எடுத்துக்கொண்ட தால் கொல்கத்தா அணியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட் டத்தில் கொல்கத்தா அணி 7 விக்கெட்களால் மும் பையை வெற்றி கொண்டது.

இந்த வெற்றியால் புள்ளிகள் பட்டியலில் 4ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது கொல்கத்தா அணி. மும்பை அணி 6ஆவது இடத்துக்கு இறங்கியுள்ளது.

ஆனால், முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு எதிராக கொல்கத்தா அணி தாமதமாக பந்து வீசியது. இதனால், அந்த அணியின் தலைவர் மோர்கனுக்கு 24 இலட்சம் இந்திய ரூபாயும், மற்ற வீரர்கள் அனைவருக்கும் 6 இலட்சம் இந்திய ரூபாய் அல்லது போட்டி ஊதியத்தில் 25 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டது. (ஐ)



# இங்கிலாந்து மகளிர் தொடரில் முன்னிலை!

லண்டன், செப். 25

ஹீதர் நைற்றின் சதத்தால் இங்கிலாந்து மகளிர் அணிக்கு அபார வெற்றி கிடைத்தது. இதன் மூலம் நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் 3 - 1 என்ற கணக்கில் அந்த அணி முன்னிலை பெற்றுள்ளது.

எமி சற்றர்ட்வைற் (54) கேட்டி மார்ட்டின் (65) அரைச்சதங்களின் உதவியால் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 244 ஓட்டங்களை குவித்தது. 245 இலக்கை துரத்த ஆரம்பித்த இங்கிலாந்து அணியின் தலைவி நைற் சதம் அடித்து அந்த அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

நியூசிலாந்து மகளிர் அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. நான்காவது போட்டியில் அறிமுகமான நியூசிலாந்தின் பந்துவீச்சாளர் ஹன்னா ரோவ் ஆச்சரியமளிக்கும் விதத்தில் பந்துவீசினார். இந்தப் போட்டியில் இங்கிலாந்துக்கு அதிக அழுத்தத்தை ஏற்படுத்திய அவர் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து போட்டியிலும் வெற்றி பெறும் விதத்தில் ஆடியது. முதல் 10 ஓவர்களில் இங்கிலாந்து 49 ஓட்டங்களையே எடுத்திருந்தது. ரோவ் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரையும் விரைவாக வெளியேற்றினார். லாரன் ஹில் 33 ஓட்டங்கள், பியூமண்ட் மார்ட்டின் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும், நைட் எமி ஜோன்ஸ் இணை நான்காவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களை சேர்த்தனர். நடுவரிசை வீராங்கனைகள் போராடியதால் இங்கிலாந்து அணியின் பக்கம் போட்டி சாய்ந்தது.

இறுதியில் 49.3 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து மகளிர் வெற்றி பெற்றது. (ஐ)

# கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமை மீறல்: பாராளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம்

## தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 25

**“கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம்” என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த முயன்றபோது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்று அவரது கட்சி அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“திலீபனின் நினைவுத் தூபிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தனியாகத்தான் சென்றார். மக்களை அணிதிரட்டவில்லை. வருடா வருடம் குடும்பத்தோடு அமைதியாக அஞ்சலி செலுத்துவார். அதுபோல் இம்முறையும் கடந்த நாட்களாக அஞ்சலி செலுத்தி வந்தார்.

ஆனால், நேற்றையதினம் அஞ்சலி செலுத்த முயன்றபோது அங்கிருந்த பொலிஸார் தடுத்தனர். எதற்காகத் தடுக்கிறீர்கள்? நீதிமன்ற தடை உத்தரவு உள்ளதா? எனப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், பொலிஸாரிடம் வினவினார். எனினும், பொலிஸார் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரை நினைவுகூர முடியாது எனக் கூறியே அவ்விடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனைக் கைதுசெய்தனர்.

எனினும், கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டு விடுவிக்கும் நேரத்தில் “நினைவுகூர்வது தவறு என நாங்கள் வழக்குத் தாக்கல் செய்யவில்லை. கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாலே கைதுசெய்தோம்” என்று பொலிஸார் கூறினர்.

கஜேந்திரன் எம்.பி. அவ்விடத்தில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றியே நினைவேந்தல் செய்ய முற்பட்டார். பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் ஒரு சமூக இடைவெளியைக் கூட அவர் பின்பற்றியிருந்தார். ஆனால், பொலிஸாரே தனிமைப்படுத்தல் விதிகளை மீறிச் செயற்பட்டனர். அராஜகமாக கஜேந்திரனின் உடலைப் பிடித்து, காலால் தட்டி கலவரம் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.

அவர் கைது செய்யப்பட்டதை அறிந்து அவ்விடத்துக்குச் சென்ற எமது கட்சியின் இரு பெண் உறுப்பினர்கள் பொலிஸாரால் சட்டவிரோதமாகக் கையாளப்பட்டனர்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் எம்.பி. கைது செய்யப்பட்டிருந்தால் அவர் அந்த நினைவிடத்துக்குச் சென்றபோதே கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏன் கற்பூரம் ஏற்றி நினைவேந்தல் செய்ய முற்பட்டபோது கைதுசெய்யப்பட்டார்?

கஜேந்திரன் எம்.பியைக் கைது செய்தமைக்கு கொரோனா விதிமுறைகள் காரணமல்ல; நினைவேந்தல் செய்தமையே காரணம் எனத் தெரிகின்றது. ஏனெனில், நினைவேந்தல் மேற்கொண்ட இடத்தில் கஜேந்திரன் எம்.பி. மாத்திரம் இருக்கவில்லை. ஊடகவியலாளர்கள் இருந்தார்கள். திலீபனின் நினைவிடத்தில் பொலிஸார் வந்ததை அறிந்ததும் பல பொதுமக்களும் கூடினார்கள்.

கொரோனா விதிமுறைகளை மீறியதாக கஜேந்திரன் எம்.பி. மீது நடவடிக்கை எடுத்திருந்தார்கள் எனில் ஏன் அங்கு கூடிய மற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. உண்மையில் கஜேந்திரன் எம்.பி. சுகாதார விதிமுறைகளை மீறவில்லை. அவர் நினைவேந்தல் மேற்கொண்டமைக்காவே கைதுசெய்யப்பட்டார்.

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ மற்றும் நேற்றைய சம்பவத்தோடு தொடர்புடைய ஏனைய பொலிஸாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம். எதிர்வரும் 27 ஆம் திகதி பொலிஸாரின் நடவடிக்கைகளைப் பொறுத்து எமது நடவடிக்கைகள் தொடரும். இது தொடர்பில் அடிப்படை மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

சபாநாயகருக்கும் தெரியாமல் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கஜேந்திரன் எம்.பியின் சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பில் பாராளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளோம். சட்டரீதியான ஆலோசனைகளையும் பெறவுள்ளோம்.

ஐ. நா. அமர்வுகள் நடைபெறுகின்ற நிலையில் கூட பொலிஸார் இவ்வாறு நடந்துகொள்கின்றனர். கஜேந்திரனை கண்ணியமாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாது கற்பூரம் கொளுத்தும்போதே பொலிஸார் நினைவேந்தலைத் தடுக்கும் முகமாக செயல்பட்டனர்.

தமிழ்த் தேசத்து மக்களின் உரிமைகள் தொடர்பில் இந்த அரசு கொடுக்கும் எந்தவொரு வாக்குறுதியையும் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் நாம் மீண்டும் ஒருமுறை ஆணித்தரமாகக் கூறுகின்றோம்” - என்றார். (இ - 03)

# இளம் பெண் மருத்துவரை பலிகொண்ட கொரோனா

காலி, செப். 25

காலி, கராப்பிட்டி வைத்தியசாலையில் கொரோனா மற்றும் நிமோனியா காரணமாக 31 வயது பெண் மருத்துவர் ஒருவர் உயிரிழந்தார்.

இரத்மலானை - யட்டோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த தரிந்தி தில்ஷிகா எனும் மருத்துவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த மருத்துவர் கடந்த 23ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

தொடர்ந்து கடந்த 02ஆம் திகதி கராப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையிலேயே அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார். (இ)

# சம்பிக்க எம்.பி. சி.ஐ.டியில் 3 மணிநேரம் வாக்குமூலம்



கொழும்பு, செப். 25

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று மூன்று மணித்தியாலங்கள் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த அரசில் பாரிய நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராக அவர் பணியாற்றிய காலப்பகுதியில் இடம்பெற்றது எனக் கூறப்படும் தவறான நிதிக் கையாளுகை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுக்கின்றது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக அவர் நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். (இ)

# வடமராட்சி கிழக்கில் இராட்சத மீன்!





வடமராட்சி, செப். 25

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் கரைவலை சம்மாட்டியான டொன்ஸ் என்பவரின் வலையில் பாரிய கோமராசி மீன் பிடிபட்டுள்ளது.

சுமார் 8 அடி நீளம் கொண்ட குறித்த மீனை இயந்திரம் மூலம் கரைக்கு மீனவர்கள் கட்டியிழுத்தனர்.

கோமராசி அல்லது புள்ளிச் சுறா என அழைக்கப்படும் குறித்த மீனை வலையில் இருந்து அகற்றி மீனவர்களால் மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது.

வலைகளுக்கு நடுவே அதிகளவான மீன்கள் வந்தபோதிலும் கோமராசி மீனின் வருகையால் மீன்கள் எதுவும் பிடிபடவில்லை

சில நாட்களுக்கு முன்பு மேலும் ஒரு கோமராசி மீன் குறித்த சம்மாட்டியின் வலையில் அகப்பட்டதோடு நேற்று இரண்டாவது முறையாகவும் பிடிபட்டுள்ளது.

ஆழ்கடலில் வசிக்கும் இம் மீன்கள் சில நாட்களாக கரைக்கு வந்து போவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (இ - 02)

## நாடு திறக்...

மூன்று துறைகளின் கீழ் இந்தத் திட்டமிடல் தயாரிக்கப்பட உள்ளதோடு, அரச துறையைச் செயல்படுத்துவதற்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு பொது நிர்வாக அமைச்சிடமும் பொதுப் போக்குவரத்து சேவைகளுக்கான முறைமைகளைத் தயாரிக்கும் பொறுப்பு போக்குவரத்து அமைச்சிடமும், தனியார்த்துறைச் சேவைகளை நடத்துவதற்கான முறைமைகளை தயாரிக்கும் பொறுப்பு தொழில்துறை அமைச்சிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சுகாதார நிபுணர் குழுக்கள் மற்றும் சுகாதார அமைச்சு ஆகியவற்றின் வழிகாட்டல்களின் கீழ், மேற்படி பொறுப்புவாய்ந்த அமைச்சுகளால் பரிந்துரைகள் வெளியிடப்படும். மேற்படி திட்டமிடல் செயற்படுத்தப்படும் போது, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உள்ராட்சி மன்றங்கள், கிராமிய அபிவிருத்திக் குழுக்கள் மற்றும் ஊடகத்துறையின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று, பஸில் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

கோவிட் சவால்களுக்கு மத்தியில், புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் பொருளாதார செயல்பாடுகளைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல, அனைத்துத் துறைகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டிய பஸில் ராஜபக்ஷ, 2021 இரண்டாவது காலாண்டுப் பகுதியில், 12.3 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தைப் பேணக்கிடைத்ததென்றும் நாட்டை மூடி வைத்திருப்பதால், மூன்றாவது காலாண்டில் அது ஒரு சதவீதமாகக் குறைவடைந்துள்ளதென்றும் 4ஆவது காலாண்டிலேனும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகத்தை 3 சதவீதமாகப் பேணும் இலக்கை நோக்கிப் பயணிப்பது அத்தியாவசியமாகி உள்ளதென்றும் அவர் எடுத்துரைத்தார். எவ்வாறெனினும், இவ்வாண்டின் மொத்தப் பொருளாதார அபிவிருத்தி வீதத்தை 5 சதவீதமாகப் பேண எதிர்பார்ப்பதாகவும், அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது. அதற்கான பரிந்துரைகள், சுகாதார நிபுணர்கள் குழுவினால் கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆளுநர்கள் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு, இந்தப் பரிந்துரைகளை நேரடியாக அனுப்பி வைக்குமாறு, உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு, தடுப்பூசி ஏற்றல் பணிகள் முழுமையடையும் வரை காத்திருக்கத் தேவையில்லை என்று, யுனிசெவ் உள்ளிட்ட சிறுவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்புகள் மற்றும் உள்நாட்டின் சிறுவர் நோயியல் விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சிறுவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எவ்விதத் தடைகளுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமாயின், பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகள் என்பன விரைவாகத் திறக்கப்பட வேண்டுமென்றும் அதற்கான உரிய சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், பெற்றோரின் அர்ப்பணிப்பு மற்றும் அக்கறை போன்றன இதில் முக்கியத்துவம் பெறுகின்றன என்றும், மருத்துவர்கள் எடுத்துரைத்தனர்.

ஆயுர்வேத கோவிட் சிகிச்சை மத்திய நிலைய முறைமையின் முக்கியத்துவம் பற்றியும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. சுற்றுலாத்துறை அபிவிருத்தியை இலக்கு வைத்து, சுற்றுலா வலயங்களுக்கு அருகில் புதிய ஆயுர்வேத கோவிட் சிகிச்சை நிலையங்களை நிறுவுவது தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கோவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், சுதேச ஔடதங்களுக்கு, சர்வதேச ரீதியில் பெரும் கேள்வி நிலவுகின்றது. அதனால், ஔடத ஏற்றுமதியில் காணப்படும் தடைகளை நீக்கி, நேரடித் திட்டமொன்றைத் தயாரிப்பது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

## தியாகி திலீபன்...

ரிமை இயக்கத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன் ஏற்பாட்டில் நடக்கவுள்ள இந்த நிகழ்வுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி பொலிஸார் மன்னார் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இதையடுத்து, அவரை நேற்று மதியம் 1.30 மணிக்கு நீதிமன்றில் முற்படுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி, அவர் நேற்று நீதிமன்றில் முற்பட்டார்.

சிவகரன் சார்பில், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். சிராய்வா, சட்டத்தரணி அன்ரனி றொமோசன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். அவர்கள், "மன்னர் பொலிஸார் தாக்கல் செய்ததுபோல் மக்களை ஒன்று சேர்த்து நினைவேந்தலை நடத்த எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும், பொலிஸார் கற்பனையில் பொய்யான வழக்கை மன்றில் தாக்கல் செய்துள்ளனர் என்றும் அவர்கள் தமது சர்ப்பணத்தை வழங்கினர்.

மேலும், புலனாய்வு துறையினரின் தகவலுக்கு அமைவாக என்ன சான்றுடன் குறித்த வழக்கை பொலிஸார் மன்றில் தாக்கல் செய்தனர் என்று கேள்வி எழுப்பியதுடன், பொலிஸார் மன்றில் தெரிவித்தது போல் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி மக்களை ஒன்று கூட்ட முயற்சிகளும் இடம்பெறவில்லை எனவும்,எனவே பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சட்டத்தரணிகள் மன்றில் தெரிவித்தனர்.

அத்துடன், சிவகரன் எதிர்வரும் 26ஆம் திகதி நித்திலம் பதிப்பகத்தில் மக்களை ஒன்றுகூட்டி எவ்வித ஒன்று கூடலையும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்தார்.

இதையடுத்து, பொலிஸாரின் வேண்டுகையை ஏற்க மறுத்த நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறியதுடன், வழக்கை எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (ஐ)

## செப்.11 தாக்குதல்...

அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நினைவேந்தல் நிகழ்வில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76ஆவது கூட்டத்தொடரையொட்டி, ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு அலுவலகம் மற்றும் செப்டெம்பர் 11 நினைவு அருங்காட்சியகம் ஆகியன இணைந்து, இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

ஐ.நா பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் நகருக்கு விஜயம் செய்துள்ள உலக நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், மேற்படி தாக்குதல்களால் உயிரிழந்தவர்களுக்கு கௌரவமளிக்கும் வகையில், நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## கொரோனாவால்...

தால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 530 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 31 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்றும் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 16 ஆண்கள், 5 பெண்கள் என 21 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 61 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 35 ஆண்களும், 26 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## தமிழ்...

யிலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆகியோரால் இதற்கான முயற்சி முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் இவ்விருவராலும் கையொப்பமிடப்பட்டு நேற்று அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"வடக்கு-கிழக்கைப் பிரதேசவாரியாகவும் தேசியப்பட்டியலூடாகவும் பிரதிநிதித்துவம் செய்கின்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இயன்றவரை ஒன்றிணைந்து ஈழத்தமிழர்களின் கூட்டு உரிமை சார்ந்த நிலைப்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். இது தொடர்பில், கடந்த வருட இறுதியிலும் இவ்வருட ஆரம்பத்திலும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டை மேற்கொள்ளச் செய்யும் சந்திப்புகளை நடாத்துவதில், சிவில் சமூகச் செயல்பாட்டாளர்களின் முயற்சியோடு மதத்தலைவர்களும் இணைந்து ஊக்குவித்தோம். சில கூட்டங்களைத் தலைமையேற்றும் நடாத்தியிருந்தோம்.

சமீபத்தைய நாட்களில் மீண்டும் இதைப் போன்ற ஒரு வரலாற்றுத் தேவை எழுந்திருப்பதாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் எம்மைத் தொடர்பு கொண்டு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் சிக்கல்கள் எழும்போது, அவற்றைத் தீர்த்துவைக்கவென மீண்டும் மீண்டும் புதிதாக முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, ஒரு பொதுவான மாற்றீட்டு அணுகுமுறையை வகுத்துக்கொள்வதை ஆராய்ந்து செயல்படுத்துவதே பொருத்தமாகத் தெரிகிறது.

இவ்வாறான ஒரு முயற்சியை முன்னெடுப்பதில் முதற்கட்டமாகச் சமூகத்தின் பல மட்டங்களில் இருந்தும் கருத்துகளைப் பெற்று, அவற்றைப் பரிசீலித்து, அடுத்தகட்டமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தனித்தனியாகவும் கூட்டாகவும் கலந்துரையாடி, தக்க வழி ஒன்றை வகுக்க ஆவன செய்வதற்காகப் பூர்வாங்கச் செயற்குழு ஒன்றை எமது மேற்பார்வையில் உருவாக்கிவருகிறோம்.

வடக்கு-கிழக்கு இணைந்து மேற்கொள்ளும் இம்முயற்சியில் சட்டத்துறை சார்ந்த இளந்தலைமுறையோடு, சிவில் சமூக மற்றும் மரபுரிமைச் செயல்பாடுகளில் இயங்கிய அனுபவம் கொண்டவர்களும், ஊடக அமையங்களை ஸ்தாபித்துச் செயல்பட்ட அனுபவம் வாய்ந்தவர்களுமாக, எந்தவித அரசியற் கட்சிப் பின்னணியும் இல்லாத ஐவர் இணைக்கப்பட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, இவர்கள் கல்வி மற்றும் சட்டத்துறை சார்ந்தவர்களோடு கலந்துரையாடல்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்தப் பூர்வாங்கக் குழுவின் பொதுத் தொடர்பை சட்டத்துறை சார்ந்த மூவர் கையாள்வது பொருத்தம் என்ற அடிப்படையிலும், இளைய தலைமுறையின் பங்கேற்பு இவ்வாறான முயற்சிகளுக்கு அவசியம் என்ற நோக்கோடும், மேலும் இரண்டு சட்டத்தரணிகள், இயன்றவரை பால், மத, மற்றும் பிரதேச சமத்துவத்துடன் இணைக்கப்பட்டு பொதுத் தொடர்பைக் கையாளவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். செயற்குழு மற்றும் பொதுத்தொடர்பில் பங்கேற்பவர்களின் விபரங்களை, ஆரம்ப கலந்துரையாடல்கள் முடிவடைந்ததும் வெளிப்படைத்தன்மையோடு அறியத்தரும் பணியை மன்னாரைச் சேர்ந்த அ. அன்ரனி றொமோல்சன் எனும் சட்டத்தரணியிடம் கையளித்திருக்கிறோம்.

இந்தக் குழுவில் இணைந்து கொள்ளவும், ஆலோசனைகளை வழங்கவும், இம்முயற்சியை ஊக்குவித்துச் செயல்படவும் விரும்புவோர் participate@tamildemocracy.org என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகத் தமது தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளலாம்", எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விகிதாசார...

தும் இருப்புகளை இல்லாதொழித்து, இந்நாட்டை இரண்டு பெரிய கட்சிகளுக்கு மட்டும் உரிய நாடாக மாற்ற முயற்சிகள் நடக்கின்றன" என எச்சரித்துள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக்குழுவின் அங்கத்தவருமான மனோ கணேசன் எம்பி.

"இப்பின்னணியில், தேர்தல் சீர்திருத்த விவகாரத்தில், விகிதாசார முறைமை விட்டுக்கொடுக்க முடியாது" என்ற பொது நிலைப்பாட்டில், தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய தமிழ், முஸ்லிம் கட்சிகளும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஏனைய தமிழ், முஸ்லிம் மற்றும் பெரும்பான்மை கட்சிகளுட னும் பேசி வருகிறோம்.

இது தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மை கட்சி பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளேன். இதுபற்றிய தங்கள் நிலைப்பாட்டை இக்கட்சிகள் இன்னமும் தெரிவிக்கவில்லை.

அரசாங்கத்தின் பிரதான பங்காளி கட்சியான சிறீலங்கா சுதந்திர கட்சி, மக்கள் விடுதலை முன்னணியுடனும் (ஜே.வி.பி.) நாம் கருத்துகளை கலந்து பேசி உள்ளோம்.

பாராளுமன்றத்தில் இடம்பெறும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, எம்பி அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், எம்.பி. சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி ஆகிய கட்சிகளுடனும் பேச உள்ளேன். இராஜாங்க அமைச்சர் அமல் வியாழேந்திரனுடனும் கலந்துரையாடியுள்ளேன்.

இந்த அனைத்து கட்சிகளும், அரசாங்கம், எதிரணி பேதங்களுக்கு அப்பால் தமது கட்சிகளின் இருப்புகளையும், நமது மக்களின் இருப்புகளையும் உறுதிப்படுத்த ஒருமித்து நிற்க உடன்படுவார்கள் என நம்புகிறேன் - என்றார்.

## சம்பந்தன்...

வுள்ளது.

இந்த நிகழ்வினை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஆர். சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கூட்டாக ஆரம்பித்துவைப்பார்.

இந்த ஆவணப்படத்தை சோமீதரன் இயக்கியுள்ளார். இந்த ஆவண பட திரையிடல் நிகழ்வை தொடர்ந்து "இலங்கையின் இனஞ் சார்ந்த நில ஆக்கிரமிப்பு: முறைகள், விளைவுகள் மற்றும் தமிழ் நில பாதுகாப்பு" என்ற இணையவழி கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலில் இந்தியாவில் 30 வருடங்களுக்கு மேலாக மக்களின் நில உரிமைகளுக்காக போராடும் செயல்பாட்டாளரான கலாநிதி மேதா பட்கார் அம்மையார், சென்னை பல்கலைக்கழ பேராசிரியர் ராமு மணிவண்ணன், அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டால் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். இந்த நிகழ்வில் இஸ்ரேல் நாட்டில் இருந்து பேராசிரியர் ஓரன் யிப்டசெல் முதன்மை உரை ஆற்றுவார்.

இந்த குழு விவாதத்தை தொடர்ந்து ஈழத்தை பூர்வீகமாக கொண்ட கனடாவின் புகழ்பெற்ற இசை கலைஞரான ஷான் வின்செண்ட் டி போலின் இசை நிகழ்வு ஒன்று 20 நிமிடங்களுக்கு இடம் பெறும். ஆவண படம் திரையிட்ட பின்னர், அந்த படம் தொடர்பிலான ஆய்வு ரீதியான கலந்துரையாடல் ஒன்றில் இளையோர்கள் கலந்துகொள்வார்கள். இந்த கலந்துரையாடலில் பிரித்தானியா, தமிழ் நாடு மற்றும் புலம்பெயர் நாடுகளில் இருந்து இளையோர்கள் கலந்துகொள்வர்.

"இன்று சனிக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 5. 30 மணிமுதல் சில மணி நேரங்களுக்கு உங்கள் நேரத்தை தயவு செய்து ஒதுக்கிவைத்து இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று நீதியரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்கான இணைப்பு:

Zoom Link: https://bit.ly/LandGrab2021
Webinar ID: 841 5154 5684
Passcode: TH2021

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 16 - 01 - 1933 |  | 21 - 09 - 2021 |

## திருமதி கந்தையா நாகரட்ணம்

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நாகரட்ணம் அவர்கள் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் (வாத்தியார்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா (குமாரவேல்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவகுமாரன், சுகந்தி, காலஞ்சென்ற சசிகுமாரன், சக்திகுமாரன், சுவேந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,சுகந்தி, சண்முகதாசன், குமுதா, சிவலோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், திலகவதியார், காலஞ்சென்றவர்களான தவரததினம், விவேகானந்தன், புவனரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,றூபன், சுகலியா, முகுந்தன், நிறோசன் ஆகியோரின் பெரியம்மாவும்,சுதர்சனா அவர்களின் அன்புச் சித்தியும்,கஜன், சுகன்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்மிகா, றொமேஷ், நிவேக்கா, நீரஜா, றம்யா, அருணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

*கிரியை*
Monday, 27 Sep 2021 11:00 AM - 12:30 PM
Angel Funeral Directors 267 Allenby Rd, Southall UB1 2HB, United Kingdom

*தகனம்*
Monday, 27 Sep 2021 1:30 PM - 2:00 PM
Golders Green Crematorium 62 Hoop Ln, London NW11 7NL, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிவா - மகன்**
+447799718396

தகவல்:
**குடும்பத்தினர்.**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 - 02 - 1942 |  | 23 - 09 - 2021 |

## கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா

**(ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி வடமாகாணம்)**

வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வட்டு.கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேற்பிள்ளை விவேகானந்தராசா அவர்கள் கடந்த (23.09.2021) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேற்பிள்ளை - மங்கையர்க்கரசி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான Dr.கெங்காதரம்பிள்ளை - தபோதினி தம்பதியரின் அன்பு மருமகனும்,பரமேஸ்வரயின் அன்புக் கணவரும், தர்ஷினி, மதனராஜ், சுதிர்தலா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஞீபரன், வித்தியா, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,தனலட்சுமி, வள்ளிநாயகியம்மா, இராஜகுலேந்திரன், கணேசராசா, அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் லோகேஸ்வரி, Dr. விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிஷிகா, கிரிசன், பூர்விகா, விகான், கிரிஷ்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.09.2021) சனிக்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**பரமேஸ்வரி - மனைவி** +94212252627
**மதனராஜ் - மகன்** +447888005876

தகவல்:
**குடும்பத்தினர்.**

# இலங்கையின் எரிசக்தி கட்டுப்பாடு மிக விரைவில் வெளிநாடு வசமாகும்



*கொழும்பு, செப். 25*

"கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தை வெளிநாட்டுக்கு வழங்குவதால், சிறு நாடான இலங்கையின் எரிசக்தி கட்டுப்பாடு மிக விரைவில் வெளிநாட்டு நிறுவனத்தின் வசமாகும் ஆபத்துள்ளது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உலகின் வேறு எந்தவொரு நாடும் இயற்கை வாயு விநியோக விலைமனு மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியை ஒன்றிணைப்பதில்லை.

அத்தகைய நடைமுறையைப் பின்பற்றினால் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு மாத்திரம் அல்லாது, நாட்டையே தன்வசப்படுத்துவதற்கான இயலுமை அந்த நிறுவனத்துக்குக் கிடைக்கும். 2035 ஆம் ஆண்டு முழுமையாக மின்சார சபைக்குச் சொந்தமாகவுள்ள கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலை யத்தை உரிய விலை மனு நடைமுறைக்கு மாறாக, சூம் ஊடாக நள்ளிரவு வேளையில் அமெரிக்க நிறுவனத்தி டம் கையளிக்கும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வரை அமைச்சரவை மௌனம் காத்ததற்கான காரணம் என்ன? அமைச்சரவை மௌனம் காத்த குற்றத்திலிருந்து விடு பட முடியாது" - என்றார்.

### எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை

# சாதாரண தர பரீட்சையில் தோற்றிய அரசியல் கைதிக்கு சிறந்த பெறுபேறு

*கொழும்பு, செப். 25*

சிறைச்சாலையில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய தமிழ் அரசியல் கைதி ஒருவர் உள்ளிட்ட இருவர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் வட்டரெக்க மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் இருந்து 4 கைதிகள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் மகசின் சிறைச்சாலையில் இருந்து பரீட்சையில் தோற்றிய தமிழ் அரசியல் கைதி ஒருவரும் மற்றுமொரு கைதியும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வளித்து அவர்களைச் சிறந்த பிரஜைகளாக சமூகத்தில் இணைப்பது சிறைச்சாலைகள் திணைக்களத்தின் முக்கிய கடமைகளில் ஒன்று எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)













*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி




7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

பகல்
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ரண்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை -
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம் -தற்போதைய நெருக்கடிகளை எப்படி தாண்டுவது



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு